## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


02.07.2023 பொதுக்காலம் 13ம் ஞாயிறு - திருப்பலி 02

03.07.2023 புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா - திருப்பலி 03

06.07.2023 புனித மரிய கொரற்றி - திருப்பலி 04

07.07.2023 அருளாளர் மரிய ரொமேரோ மெனஸஸ் விழா - திருப்பலி 05

09.07.2023 பொதுக்காலம் 14ம் ஞாயிறு - திருப்பலி 07

16.07.2023 பொதுக்காலம் 15ம் ஞாயிறு - திருப்பலி 08

22.07.2023 புனித மகதல மரியா விழா - திருப்பலி 10

23.07.2023 பொதுக்காலம் 16ம் ஞாயிறு - திருப்பலி 11

25.07.2023 புனித யாக்கோபு திருத்தூதர் விழா - திருப்பலி 12

26.07.2023 புனிதர்கள் சுவக்கின், அன்னாள் - திருப்பலி 13

28.07.2023 புனித அல்போன்சா முட்டாத்துப் படத்து - திருப்பலி 14

29.07.2023 புனிதர்கள் மார்த்தா, மரியா, லாசர் - திருப்பலி 15

30.07.2023 பொதுக்காலம் 30ம் ஞாயிறு - திருப்பலி 16

31.07.2023 லொயோலா நகர் புனித இஞ்ஞாசியார் - திருப்பலி 17


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


புனித தோமாவின் நம்பிக்கை நம்மை வாழ வைக்கும் 19

அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் வாழ்வு தரும் பாடம் 22

புனித அல்போன்சா முட்டாத்துப் படத்து 24

திருஅவைச் செய்திகள் 26

# பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 02.07.2023 பொதுக்காலம் 13ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. 2அர. 4: 8-11.14-16 II. உரோ. 6: 3-4.8-11 மத். 10: 37-42

கிறிஸ்துவோடு இணைந்து நம்பிக்கை கொண்டவர்களாய் வாழும் சகோதர சகோதரிகளே, இன்று திருஅவையானது பொதுக்காலம் 13ம் ஞாயிறு திருப்பலிக்கு தங்களை அன்புடன் அழைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எலிசாவிற்கு சூனேம் நகர பெண் ஒருவர் பொருளாதார வகையில் உறுதுணையாக இருக்கிறார். அந்தப் பெண்ணுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. இந்தப் பெண்ணின் கைம்மாறு கருதாத உதவியைக் கண்டு எலிசா இறைவனிடம் இந்தப் பெண்ணுக்கு குழந்தை பாக்கியம் தந்தருள மன்றாடுகிறார். இங்கு இந்தப் பெண் இதுவரை அவமானம் என்ற சிலுவையைச் சுமந்து நடந்தாள். இப்போது குழந்தைப் பாக்கியம் கொடுத்து இந்தப் பெண்ணின் அவமானத்தை ஆண்டவர் போக்குகின்றார். இரண்டாம் வாசகத்தில் திருமுழுக்கினால் நாம் கிறிஸ்துவோடு இணைந்திருக்கிறோம். கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்தார்.

"தம் சிலுவையைச் சுமக்காமல், என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்" என்று கூறுகிறார். நமது சிலுவைகளான துன்பங்கள், சோதனைகள், போராட்டங்கள், பிரச்சனைகள் ஆகியவைகளை ஏற்றுக்கொண்டு இயேசுவைப் பின்பற்ற நாம் இன்று அழைக்கப்படுகிறோம். இயேசுவைப் பின்பற்ற உலக இச்சைகளைத் துறக்க வேண்டும். இவ்வுலக செல்வங்கள், சுயநலப்போக்குகள், ஆசைகள் போன்ற சுமைகள் மனிதனை முகம் சுளிக்க வைக்கிறது. இந்நேரத்தில் இயேசு "மகனே, மகளே, நான் உனக்காக, உனது பாவங்களைச் சுமந்து சென்றேன். நீயும் சோதனை வேளையில் உனது சிலுவைகளை சுமந்து இந்த உலகை மறந்து என்னைப் பின்பற்றி வா" என்றழைக்கின்றார். "நீ உனது சிலுவைகளை சுமக்கும்போது நான் உன்னை தனிமையாக விட்டு விடுவதில்லை. நான் என்றும் உன்னோடு இருக்கிறேன்" என்று இயேசு நம்மைப் பார்த்துக் கூறுகிறார். நம் வாழ்வில் அனுதினம் ஏற்படும் பிரச்சனைகள் என்ற சிலுவையைச் சுமக்க இறைஇயேசுவின் துணை வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்லாயனே எம் இறைவா, உமது மந்தையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் நீதி, நேர்மை, உண்மை, இறை பக்தியில் மந்தைகளாகிய எங்களை அழைத்துச் செல்பவர்களாக திகழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகாளும் உன்னதரே, நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க, ஆட்சி செய்ய நாட்டுத்தலைவர்கள், மந்திரிகள், ஆட்சியாளர்கள் தங்களின் சுயநலவாழ்வைத் துறந்து மக்களுக்கு நன்மையைச் செய்யும் எண்ணத்தோடு செயல்பட வேண்டிய ஆற்றலையும், எண்ணத்தையும் அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. சூனேமியப் பெண்ணுக்கு குழந்தைப் பாக்கியம் அளித்தவரே, எங்களிடையே வாழும் இளம் தம்பதியர்களுக்கு உமது கருணையினால் குழந்தை பாக்கியமளித்து, அவர்களின் சுமைகளைக் களைந்து, வாழ்வில் உம்மை முழுமையாக புரிந்துக்கொண்டு உம்வழியில் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்றவரே, இன்றைய காலக்கட்டத்தில் குழந்தைகள், மாணவச் செல்வங்கள், இளையோர் அனைவருக்கும் வாழ்விற்குத் தேவையான பாதையை நீர்தாமே அவர்களுக்கு உணர்த்தி, அவ்வழியில் நடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 03.07.2023 இந்தியாவின் திருத்தூதர் புனித தோமா திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. திப. 10: 24-3 II. எபே. 2: 19-22 யோவா. 20: 24-29

ஆண்டவரில் நம்பிக்கைக்கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று இந்திய நாட்டின் திருத்தூதர் புனித தோமையாரின் திருவிழாவினைக் கொண்டாடுகின்றோம். இவர் கலிலேயாவின் யூதகுலத்தில் மீனவக் குடியில் தோன்றி அதே தொழிலைச் செய்தார். ஆழ்ந்த தெய்வ பக்தியுள்ளவர். இயேசுவைக் கண்டதும் அவரே உலக மீட்பர் என விசுவசித்து அவருக்கு சீடரானார். உயிர்த்த இயேசுவைப்பற்றி அவர் போட்ட நிபந்தனையே அவருக்கு பட்டப்பெயர் ஏற்படக் காரணமாயிற்று. ஆனால் அவர் "என் ஆண்டவரே, என் கடவுளே" என்று விசுவாசப் பிரமாணம் எழுப்பியதுபோல் வேறு யாரும் மனம்விட்டு அறிக்கையிடவில்லை. இலாசரை உயிர்ப்பிக்க செல்லும்போது மற்ற திருத்தூதர்கள் இயேசுவுக்கு ஆபத்து இருப்பதை அறிந்து தடுத்தனர். ஆனால் தோமா மட்டும் தான் "நாமும் செல்வோம் அவருடன் இறப்போம்" என்று இயேசுவுடன் ஒன்றித்த நிலையை வெளிப்படுத்தியவர். இயேசு உடலோடும், ஆன்மாவோடும் உயிர்த்ததை உறுதிப்படுத்தியதுபோல, அன்னை மரியாவின் விண்ணேற்பை உறுதி செய்து திருஅவைக்கு நம்பிக்கை கண் திறந்தபேறு பெற்றவர் புனித தோமையாராவார்.

இவர் இயேசுவின் உயிர்ப்புக்குப்பின் ஆசியாவில் சிலகாலம் பணிபுரிந்தார். பின்பு இந்தியாவிற்கு வந்து கேரளாவிலும், மயிலாப்பூரை மையமாகக் கொண்டு நற்செய்தி அறிவித்து ஆயிரக் கணக்கானோருக்கு திருமுழுக்குக் கொடுத்தார். கிறிஸ்தவ நம்பிக்கை என்னும் வித்தை விதைத்தார். கிறிஸ்துவத்தை விரும்பாத தேவ விரோதிகளால் ஈட்டியால்

குத்தி கொலை செய்யப்பட்டார். அவர் பதுங்கி செபித்த சின்னமலையும், கொலை செய்யப்பட்ட பரங்கி மலையும், அடக்கம் செய்யப்பட்ட மயிலை பேராலயமும் நம் கண்முன் காட்சியாக சுடர் விடுகிறது. நமது ஐயப்பாடுள்ள நம்பிக்கையால் நாம் எதையும் பெறமுடியாது என புனித யாக்கோபு கூறுகிறார். அன்பைப் பெற, பகைமையை அழிக்க வேண்டும் அமைதியைப்பெற, ஆணவத்தை அழிக்க வேண்டும் நீதிவாழ, அநீதியை அழிக்க வேண்டும். வாய்மையடைய, பொய்மையை அழிக்க வேண்டும், அருளைப்பெற, ஆணவத்தை அழிக்க வேண்டும். இதற்கான அருள்வேண்டி இப்பலியை தாழ்மையும் ஒப்புக் கொடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, திருஅவைப் பணியாளர்களை உம்பதம் ஒப்படைக்கின்றோம். புனித தோமையாரிடம் விளங்கிய துணிவும், ஆழ்ந்த நம்பிக்கையையும் தங்கள் சொல்லாலும் செயலாலும் விளங்கச் செய்திடவும், சக பணியாளர்களிடம் வேற்றுமைப் பாராட்டாமல் நல்லுறவுடன் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இந்திய நாட்டின் திருத்தூதராக புனித தோமையாரைத் தந்த இறைவா, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பலவிதமான துன்புறுத்தல்களும், சித்திரவதைகளும், சொந்த மண்ணில் வாழ புறக்கணிக்கப்படுவதையும் தடுத்து நிறுத்தவும், உமது திருப்பெயரின் வல்லமையோடு அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வரமருளும் இறைவா, எங்கள் கண்முன் சுடர்விடும் புனித தோமையாரின் கிறிஸ்துவ சாட்சியங்கள் எங்கள் கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்வுக்கு சவாலாக இருப்பதை உணர்ந்து எங்கள் விசுவாச வாழ்வு முதிர்ந்த பலன்தரும் செயலுள்ள வாழ்வாக மாறிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 06.07.2023 புனித மரிய கொரற்றி திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இறையேசுவின் பிரியமானவர்களே, மாசற்ற மலராக இறைவனுக்கு தன்னை அர்ப்பணித்த புனித மரிய கொரற்றியின் விழாவை மகிழ்வோடு கொண்டாட திருஅவை இன்று நம்மை அழைத்துள்ளது. வசதியற்ற பெற்றோராக இருந்தாலும் இறை வாழ்விற்கான சத்துணவை மரிய கொரற்றிக்கு அதிகமாகவே கொடுத்திருக்கின்றார்கள். இவருக்கு பன்னிரெண்டு வயதிலேயே நற்கருணை வழங்கப்பட்டது. இவர் எப்போதும் எளிமையை விரும்பினார். நற்கருணைப் பெற்ற ஐந்து வாரங்களில் மிகக் கொடுமையான இறப்பை இளம் வயதிலேயே சந்தித்தார்.

18வயதான அலெக்சாண்ரோ ஸெரன்ல்லா என்ற இளைஞன் தவறான வழியில் இவரை அடைய முயற்சி செய்து, இணங்க மறுத்த இவரை ஆத்திரத்தில் பலமுறை கத்தியால் குத்திக்கிழித்தான். அப்போதும் "பாவம் செய்யாதே, நரகம் செல்வாய்" என எச்சரித்துக்கொண்டே கீழே விழுந்தார். குற்றுயிராய் இருந்தவரை மருத்துவமனையில் சேர்த்தனர். கொலை செய்தவனை நான் மன்னித்து விட்டேன் எனக் கூறி மாசற்ற மலராக உயிர் நீத்தார். கொலை பாதகம் செய்தவருக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டு சிறையில் அடைத்தனர். பலகாலம் மனம் வருந்தவில்லை. ஒருநாள் இரவில் இப்புனிதையின் கனவில், தோன்றி கைநிறைய மலர்களை அள்ளி, விண்ணினின்று தனக்கு கொடுத்ததாக சொல்லி மனம்மாறினான்.

27 ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலையாகி மரிய கொரற்றியின் அன்னையிடம் சென்று மன்னிப்புக் கேட்டான். பிறகு கப்புச்சின் மூன்றாம் சபையில் இணைந்து துறவியாகவே இறுதிவரை அலெக்சாண்ரோ ஸெரன்ல்லா வாழ்ந்தார். 12ம் பத்திநாதர் மரிய கொரற்றிக்குப் புனிதர் பட்டம் வழங்கி சிறப்பு செய்தார். எவருக்கும் இல்லாத அளவில்லா மக்கள் கூட்டம் 2,50,000 மக்கள் பல நாடுகளிலிருந்து இவருக்காக உரோமையில் கூடினர். இவரது தாயும் இரு சகோதரிகளும் ஒரு சகோதரனும் பங்கேற்றனர். இவர்களோடு அலெக்சாண்ரோவும் மண்டியிட்டு மகிழ்ச்சிக் கண்ணீர் வடிய அங்கு இருந்தார். பாவமின்றி வாழ்வது எப்படியென்பதை உலகிற்கு அறிவித்த புனிதரிடம் அவரைப்போல் மாசற்ற மலராக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவை அருட்பணியாளர்கள் அனைவரும் மாசற்றவர்களாக வாழ்ந்து அதே வழியில் மக்களையும் வழிநடத்த உமது தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாக அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. மாசற்ற இறைவா, உம்வழி நடக்க வேண்டுமென புனித மரிய கொரற்றி தன்னை இழந்தார். நற்செய்தி என்னும் இப்புனித பயணத்தில் பயணிப்போர் அனைவரும் பாவமாசு அணுகாமல் தன்னை மறுத்து நிலைவாழ்வைக் காத்துக்கொள்ள அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. நன்னெறியை போதித்த இறைவா, இளையோர் வாலிபர், மாணவ மாணவியர் அனைவரும் நற்செய்தி வழியில் நடந்து வீழ்ந்து விடாமல் தங்களையும் தங்கள் சமூகத்தையும், பாதுகாக்கவும், வழிநடத்தவும் வேண்டிய அருளை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.07.2023 அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறையேசுவின் பிரியமானவர்களே, இருப்பவர்களிடம் இருந்து பெற்று, இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவும் ஒரு வழியினை மிக வெற்றிகரமாக கடைபிடித்தவர்களில் இன்று நாம் நினைவு கூறும் அருளாளர் மரிய ரொமேரோ என்ற சலேசிய அருட்சகோதரியும் ஒருவர். வசதி மிகுந்த குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும், ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்தில் தனது 12 வயதில் சலேசிய கன்னியர் நடத்தும் பள்ளியில் கல்வி கற்றார். தனது ஆன்ம தாகம், சலேசிய உள்ளுணர்வு மற்றும் தனிவரத்தின் மூலம் ஈடேறும் என்று நம்பினார். 1921ல் சலேசிய சகோதரிகள் சபையில் சேர்ந்தார். நித்திய வார்த்தைப்பாட்டிற்கு பின், 1931ல் ரொமேரோ கோஸ்டா ரிக்கோ நாட்டுக்கு பணிசெய்ய அனுப்பப்பட்டார். ஏழை எளிய ஆதரவற்ற சிறார்களுக்கு பணி செய்ய வேண்டும் என்பதையே இலட்சியமாக கொண்டிருந்த ரொமேரோவுக்கு, ஏறக்குறைய 40 ஆண்டுகள் தரப்பட்ட பணி என்னவென்றால், முழுக்க முழுக்க பணக்கார பிள்ளைகளுக்கான பள்ளி.

தன்னிடம் பயிலும் வசதியுள்ள பணக்கார பிள்ளைகளிடம் இத்தகைய மக்களைப் பற்றி சொல்வதை வழக்கமாக்கினார். அது நாளடைவில் பிள்ளைகளின் வழியாக பெற்றோருக்கும் இந்த எண்ணம் சென்று சேரவே, ரொமேரோவின் இலட்சியம் மெல்ல மெல்ல வளர ஆரம்பித்தது. இவர்களின் உதவியால் பல இடங்களில் விளையாட்டு, மகிழ்ச்சிக்கான மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதுமட்டுமல்ல 1961ல் ஏழை ஆதரவற்ற சிறார்களுக்கான ஒரு பள்ளிக்கூடம், 1966ல் இலவச மருத்துவமனை, 1972ல் வீதியில் தங்கி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் எண்ணற்ற ஏழை எளிய மக்களுக்கு தங்குதவற்கான வீடு கட்டும் திட்டத்தையும் முதன்முதலில் நிகழ்த்தி காட்டினார் மரிய ரொமேரோ. இறை நம்பிக்கை, திறமை, ஆர்வம் மற்றும் உண்மையான அர்ப்பணம் கொண்ட மரிய ரொமேரோ, 1977ல் ஜூ லை 7ம் நாள் மறைந்தார். 2002ல் திருஅவையினால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட மரிய ரொமேரோ மத்திய அமெரிக்காவின் முதல் அருளாளர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்புக்குரியவர்களே, இறைவனின் அழைப்பை ஏற்று, தொன் போஸ்கோவின் வழியில் இறையரசைக் கட்டியெழுப்பிய மரிய ரொமேரோவை போன்று நாமும் முழுமையான வாழ்வு வாழ்வோம். நாம் இறையன்பின் வடிவமாக மாற, நம் அழைப்பினை உணர்ந்தவர்களாய் வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு

நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து, வாழும் வரம் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் இறைவா, நீர் கூறிய ஆன்மீக, சமூக பண்புகளான ஆன்ம தாகம், மனத்துயர், பணிவு, இறை நம்பிக்கை, பேரிரக்கம், தூய உள்ளம், நற்குணம் மற்றும் நம்பிக்கை தவறாமை ஆகியவற்றை தன் வாழ்வில் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த அருளாளர் ரொமேரோவைப் போன்று, நாங்களும் உம் பணியைச் செய்திடும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, எங்கள் பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய மாணவர்களிடையே ஆசிரியர்கள் ஏற்றத்தாழ்வு பாராமல் அனைவரையும் தன் பிள்ளைகள் போல் பாவித்து, அவர்களுக்கேற்ற முறையில் கல்வி புகட்டும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 09.07.2023 பொதுக்காலம் 14ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. வு. சாம்சன்

I. சக். 9: 9-10 II. உரோ. 8: 9.11-13 மத். 11: 25-30

என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவருக்குச் செவிசாயுங்கள், இயேசுவின் இனிய சகோதர சகோதரிகளே, இன்று பொதுக்காலம் பதினான்காம் ஞாயிறு நமக்கு இளைப்பாறுதல் தருகின்றவரும், கனிவும், மனத்தாழ்மையும் உடையவருமான நம் ஆண்டவரின் சந்நிதானத்தில் ஒன்று கூடியுள்ளோம். நீதியுள்ளவரும் எளிமையானவரும் வெற்றி வேந்தருமான நம் இறைவன் பகைமையையும், போரையும், வன்முறையையும் ஒழித்து அமைதியை நமக்கு அருள்வார் என்னும் ஆசீர்வாத வாக்குகளும் "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன், ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" என்னும் அழைப்பும் நமக்கு புதிய மகிழ்வையும் நம்பிக்கையையும் தருகின்றன. ஆகவே நாம் அனைவரும் இறைவனின் நுகமாகிய இறைக் கட்டளைகளை ஏற்றுக்கொண்டு இறைவனிடம் கற்றுக்கொள்வோம். விண்ணுக்கும், மண்ணுக்கும் ஆண்டவராம் இறைவனைப் போற்றுவோம் அமைதியின் வாழ்த்தை இதயத்தில் சுமந்துச்சென்று உறவுகளை உறுதிப்படுத்துவோம்,

ஆண்டவர் எல்லோருக்கும் நன்மை செய்பவர் என்று திருப்பாடல் கூறுகிறது. குழந்தை தனக்கு பாதுகாப்பு, தாயும் தந்தையும்தான் என்று ஆணித்தரமான நம்பிக்கைக் கொண்டுள்ளது. நம்முடைய விண்ணகத் தந்தையின்மீது நாம் உண்மையிலே நம்பிக்கைக் கொண்டிருந்தால் நம்முடைய வாழ்விலே ஏற்படுகின்ற எத்தகைய துன்பத்தையும் கண்டு

அஞ்சமாட்டோம். துணிவோடு எதிர்த்து நிற்போம். இறை நம்பிக்கையோடு வாழ்க்கையை நாடுவோம். துணிவோடு வாழ்வை எதிர்க்கொள்வோம், இறைவனின் ஆசீர் நம்மை வழிநடத்த தொடர்ந்து இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, உம் திருவுடலாம் திருஅவையை வழிநடத்தும்திருத்தந்தை,ஆயர்கள்,குருக்கள்,கன்னியர்,துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் திருஅவைக்காகவும் மக்களுக்காகவும் எடுக்கும் முயற்சிகளில் தொய்வின்றி முழுமனதோடு செயல்பட உமதருள் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உயிரின் ஊற்றே எம் இறைவா, ஒரிசா இரயில் விபத்தில் தனது குடும்பத்தை, பிள்ளைகளை, பெற்றோரை, உற்றார் உறவினர்களை இழந்து தவிப்போருக்காக மன்றாடுகிறோம். அவர்களுக்கு நீர் ஆறுதலாகவும், அடைக்கலமாகவும் இருந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆறுதலின் அடைக்கலமே, ஆடம்பரம், பணபலம், பிடிவாதம்,பொறாமை குணம், கௌரவம், விட்டுக்கொடுக்காமை போன்ற பலதீய குணங்களால் அன்பு, ஒற்றுமை, சமாதானம் போன்ற நல்ல குணங்களை இழந்துவாடும் உம் பிள்ளைகளை நீர் கண்ணுற்று ஒற்றுமையோடும், சமாதானத்தோடும் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வழிநடத்தும் தெய்வமே இறைவா, நாட்டையும், நாட்டு மக்களையும் வழிநடத்தும் தலைவர்கள் மக்கள் நலனில் அக்கறைக்கொண்டு அவர்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சிகளும் மக்களைச் சென்றடைய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 16.07.2023 பொதுக்காலம் 15ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

I. எசா. 55: 10-11 II. உரோ. 8: 18-23 மத். 13: 1-23

இறையேசுவில் அன்பு கொண்ட இறைமக்களே, பொதுக்காலத்தின் 15ம் ஞாயிறு திருப்பலிக்கு அன்புடன் அழைக்கின்றோம். இறைவன் இப்பூவுலகை பாதுகாத்து நீர்வளம், நிலவளம் இவைகளை செழுமையாக்கி உணவு தானியங்களின் விளைச்சலால் மிகுதியாக்கி உணவளித்து உம் மக்களை காப்பாற்றி வழிநடத்துகிறீர். மந்தைகள் புல்வெளிகளில் ஆடையாக மேய்ந்து மகிழ்கின்றன. பள்ளத்தாக்குகளும் சமவெளிகளும் தானியங்களால் தம்மைப் போர்த்திக் கொண்டு, இயற்கை மிக அழகாக உலகுக்கு காட்சியளிக்கின்றன. கவிக்கோ அப்துல் ரகுமான் தம்

கவிதைகளில் இவ்வாறு கூறுகிறார். "மனிதா நீ எந்த நோக்கத்தோடு பூமிக்கு வந்தாய்? அறிமுகம் இல்லாதவரின் கைகளால் கண்ணீர் துடைக்கப்பட்டவனே, உன் அயலானின் ஒரு விழிக் கண்ணீரையாகிலும் துடைத்திருக்கிறாயா? யாருடைய கையாலோ உன் வாழ்வின் இருட்டுக்கு சுடர் ஏற்றப்பட்டு மகிழ்வோனே, நீ ஒரு இல்லத்திற்காவது இருள் நீக்க ஒரு விளக்கையாவது ஏற்றிவிட்டு போகவேண்டாமா? மரணக் காற்றில் ஒரு விளக்கைப் போல அணைந்து போகாதே, ஓர் ஊதுபத்தியைப்போல் கொஞ்சம் நறுமணத்தையாவது விட்டுப்போ, நீ உலகுக்கு வந்ததற்கு ஒரு தடயமும் இல்லாமல் மறைவதற்கு வெட்கப்படு".

இறைவன் அனுப்பும் மழைகூட பூமிக்கு வந்து, வளம் தந்து, பூத்துக் குலுங்கும் மலர்கள், காய் கனிகள் தந்து, ஏரி, குளம், கிணறு இவைகளை நிரப்பி உலகுக்கு நன்மையளித்து மறைகிறது. இறைவன் பூமிக்கு அனுப்பிவைத்த மனிதனே வளமுடன் இறைமகனுக்கு ஏற்றவனாய் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழவைத்து, இறைவழி நடக்கக் கற்றுத்தர வந்தவர்கள்தான் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் என்று அழைப்பு விடுகின்றது இன்றைய நாளின் வாசகங்கள். பெற்றோர்களே, உங்கள் குழந்தைகளின் மனநிலையை நல்ல கனிதரும், நல்ல விளைச்சல் தரும் நிலம்போல பண்படுத்திய பிறகு அவர்களில் நல்லொழுக்கமாகிய விதையை விதையுங்கள். பலன்தரும் மகனாக, மகளாக மாற்றம் காண செய்யுங்கள். ஆன்மாவை இழந்து இவ்வுலகை விட்டுச் செல்லும் இறுதிப் பயணம் வீணானது என்பதை உணர்ந்து, நல்ல கனிதரும் நிலம்போல் இறைவார்த்தை என்னும் விதையை ஏற்று பன்மடங்கு பயன்தரும் கிறிஸ்தவர்களாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆற்றல் அளிப்பவரே எம் இறைவா, உமது திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் பண்பட்ட நிலத்தில் விழுந்த விதைகளாய் நல்ல கனித்தரும் விதைப்போல் மக்களை வழிநடத்தத் தேவையான அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வளங்களைத் தருபவரே இறைவா, பரந்து விரிந்த இவ்வுலகில் உம் படைப்பின் மகிமையை பண்படுத்தி பலனளிக்கும் நற்கனிகளாக நாங்களும், எங்கள் நாடும் சிறந்து விளங்க வேண்டிய அனைத்து அருள்வரங்களையும் மழையென பொழிந்து வாழ்வளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

3. அதிசயங்கள் செய்யும் எம் காவலரே, பலவிதமான நோய்நொடியினால் வாடும் உம் பிள்ளைகளைக் கண்ணோக்கும். தாங்கள் உமக்கெதிராக செய்த தவற்றினை மன்னித்து, நிலைவாழ்வளிக்கும் உம் பிரசன்னத்தில் நம்பிக்கை உள்ளவர்களாக வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. எந்நாளும் எங்களைக் காப்பவரே, நாட்டைக்காக்க குளிரிலும், மழையிலும், பனியிலும் இடைவிடாமல் பணிபுரியும் இராணுவ வீரர்கள்மீது மனமிரங்கி, அவர்களுக்கு உடல் உள்ள நலன்தந்து சிறப்பாக பணிபுரிய வேண்டிய அருளைப்பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.07.2023 புனித மகதல மரியா விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. இபா. 3: 1-4 II. 2கொரி. 5: 14-17 யோவா. 20: 1, 11-18

இறையேசுவின் இனிய மக்களே, இன்று நம் திருஅவை புனித மரிய மகதலா விழாவை சிறப்பிக்க நம்மை அழைக்கிறது. இவர் கலிலேயா நகரிலுள்ள "மகதலா" என்னும் ஊரைச் சேர்ந்தவரானதால் மரிய மகதலா என்று அழைக்கப்படுகிறார். இவர் ஒரு செல்வந்தராக இருந்தாலும் ஏழு கொடிய பிசாசுககளின் பிடியில் சிக்கியிருந்தபோது இயேசுவின் அன்பால் விடுதலைப் பெற்று அவர்மீது ஆழமான அன்பும், நம்பிக்கையும் பெற்றார். அன்றுமுதல் இயேசுவோடும் அவரது சீடர்களோடும் தனது பயணத்தை துவங்கி தன்னோடு சில பெண்களையும் இணைத்துக் கொண்டவர்.

இயேசுவின் நற்செய்தி பயணங்களின்போதும், சிலுவை மரணத்தின் போதும், அடக்கத்திலும் உயிர்ப்பிலும் அவரோடு இருந்தவர். இயேசுவின் நற்செய்திப் பணியில் தொடக்கம் முதல் முடிவு வரை பெண் சீடராக வலம் வந்தவர். இயேசுவின் பயணத்திற்காக தன் சொத்துக்களை அர்ப்பணித்தவர் என்றும் திருவிவிலியத்தில் சொல்லப்படுகிறது. இயேசுவுக்குப்பின் அன்னை மரியாவுடன் நற்செய்திப் பணியை மேற்கொண்டு இருந்ததாகவும் அவரது எலும்பு கான்ஸ்டான்டைன் நோபிலில் ஒரு ஆலயத்தில் பாது காக்கப்பட்டதாக ஒரு மரபும், பெத்தானியாவில் லாசரோடு நற்செய்திப் பணி செய்ததாக ஒரு மரபும் கூறுகிறது. புனித மரிய மகதலேனாவின் அன்பில் இணைந்து, தியானித்து இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவற கன்னியர் அனைவரும் தம் தகுதிக்கேற்ப உறுதியோடும், உண்மையோடும், நேர்மையோடும் பணிபுரியவும், உம்மீது ஆழ்ந்த நம்பிக்கையும், மனந்தளராமல் உம்மைப் பற்றிக்கொண்டு உம்பாதையில் வழிநடக்கத் தேவையான ஆற்றலை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமே உருவான இறைவா, சாலையோரங்களிலும், மருத்துவ மனைகளிலும், யாருமற்ற, ஆதரவற்ற நிலையில் வாழும் மக்களை உம்பதம் ஒப்படைக்கின்றோம். அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நல்லுள்ளம் கொண்டவர்களை பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாக்கும் தந்தையே இறைவா, பலவிதமான பிரச்சனைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அடைக்கலம் செல்லும் பெண்களுக்கு ஏற்படும் அவல நிலையிலிருந்து விடுவித்து பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 23.07.2023 பொதுக்காலம் 16ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

I. சாஞா. 12: 13, 16-19 II. உரோ. 8: 26-27 மத். 13: 24-43

அமைதியென்னும் விதையிலிருந்து நீதியென்னும் கனி விளைகிறது (யாக்.3:18). இறையேசுவில் பிரியமானவர்களே, இன்றைய இறை வார்த்தைகள் அனைத்தும் இறைவன் நீதியின் அரசனாக இருக்கின்றார் என்பதை நமக்கு உணர்த்துகிறது. ஓர் நாட்டையாளும் தலைவர் எவ்வாறு தன் ஆட்சியில் எவ்வித பாரபட்சமுமின்றி நடுநிலையோடு ஆட்சிசெய்ய வேண்டும், எல்லா உயிர்கள்மீதும் கருத்தாய் இருக்க வேண்டும் என்பதை விளக்குகிறது. நம் இறைவன் தவறான தீர்ப்பு வழங்குபவர் அல்ல, அவர் எல்லாவற்றின்மீதும் கருத்தாய் இருக்கிறார் என இன்றைய முதல் வாசகம் கூறுகிறது. கடவுளின் சாயலாக படைக்கப்பட்ட மனிதன், தவறு செய்தபோது தண்டிக்கப்பட்டான் (எகா. காயின், ஆபேல்) கீழ்ப்படியாமை, கொலை. கடவுளை முகமுகமாய் தரிசித்த மோசேயின் முணுமுணுப்பிற்காக கானானில் நுழையும் பேற்றினை இழந்தார். இறை வார்த்தைக்கு செவிக்கொடுக்காத இறைவாக்கினராகிய யோனா மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் சிறை வைக்கப்பட்டார்.

இவ்வாறு யார் தவறிழைத்தாலும் இறைவன்முன் அனைவரும் சமம் என்ற நீதியின் கீழ் தீர்ப்புகள் அளிக்கப்பட்டன. இறைவனின் நீதித் தீர்ப்பின்போது நமக்காக பரிந்துப் பேச தூய ஆவியார் துணை நிற்கின்றார். ஏனெனில் நம் இறைவன் பேரன்புக் கொண்டவர், மன்னிக்கும் மனம் படைத்தவர், இரக்கம் காட்டுபவர் என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு உணர்த்துகின்றது. மேலும் இறைவனோடு இணைந்து வாழ்பவர்கள் எவரும் பாவம் செய்வதில்லை என்னும் இறைவார்த்தையை மனதில் ஏற்றவர்களாய் தூய ஆவியார் வழியாக பாவங்களிலிருந்து மனமாற்றம் பெற இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நீதியின் அரசரே எம் இறைவா, ஆண்டவரின் திருமுன் ஊழியம் செய்ய உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் நீதியின் பாதையிலிருந்து விலகாமல் உடல்பொருள் ஆவி அனைத்தையும் இறையன்பிற்கு ஒப்புக்கொடுக்க அருள்புரிய வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. இளைப்பாறுதல் உங்களுக்குத் தருவேன் என்ற எம் இறைவா, நாட்டில் நடைபெறும் வன்முறைகள், பசி, பஞ்சம், கொள்ளை நோய்கள், இயற்கை

பேரழிவுகள், விபத்துகள் போன்ற அழிவுகளிலிருந்து எங்களை காத்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, இன்பத்தையும் துன்பத்தையும் நீர் எங்களுக்காக சுமந்தீரே, எவ்வித ஏற்றத்தாழ்வுகளையும், பாராமல் அனைவரும் ஒன்றே என்ற பரந்த உள்ளம் படைத்தவர்களாக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நீதியின் அரசரே எம் இறைவா, உம் கையிலுள்ள நீதியின் தராசு எவ்வாறு ஏழை பணக்காரர் என்று பாராமல் தீர்ப்பு வழங்குகின்றதோ அதேப்போன்று எங்கள் நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகள், வழக்கறிஞர்கள் பாரபட்சம் பாராமல் உண்மையான நீதிவழங்கி மக்களை காக்க தேவையான ஆற்றலையும், மனவலிமையும் அவர்களுக்கு அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 25.07.2023 புனித யாக்கோபு திருத்தூதர் விழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

நம்பிக்கையில் தடுமாற்றமில்லாத சகோதர சகோதரிகளே, இன்று திருஅவை திருத்தூதர் யாக்கோபுவின் விழாவைக் கொண்டாட நம்மை அழைக்கிறது. இவர் கலிலேயாவிலுள்ள பெத்சாயிதா நகரில் செபதேயு - சலோமிக்கு பிறந்தவர். இவருடைய இளைய சகோதரர் யோவான் ஆவார். இவர் முதலில் திருமுழுக்கு யோவானின் சீடராக இருந்தவர். சகோதரர் இருவரும் தந்தையுடன் வலைகளைப் பழுதுப்பார்த்துக்கொண்டிருந்தபோது, இயேசு அவர்களை அழைக்க, உடனே அவர்கள் இயேசுவைப் பின் தொடர்ந்துச் சென்றனர். அவர்களுடைய தாய் சலோமி இயேசுவிடம் வலப்புறம் ஒருவரும் இடப்புறம் ஒருவரும் அமர அனுமதி கேட்டார். ஆனால் இயேசு, அது தந்தையின் விருப்பம் எனக் கூறிவிட்டார்.

குறிப்பாக, யாயீரின் மகளை இயேசு உயிர்த்தெழச் செய்தபோதும், (மாற்கு 5:21-43) தாபோர் மலையில் இயேசு உருமாறியபோதும்(மத்.17:1-13) இறுதியாக இயேசு கெத்சமணி தோட்டத்தில் மன்றாடியபோதும் (மத்.26:36-46) ஆண்டவர் அழைத்துச் சென்றவர்களில் யாக்கோபும் ஒருவர். இவர் ஸ்பெயின், யூதேயா நாடுகளுக்கு மாறிமாறி நற்செய்தி அறிவித்தார். "திருப்பயணிகளின் பாதுகாவலர்" என அழைக்கப்பட்டார். வெள்ளைக் குதிரையில் காட்சி கொடுத்தார். சமாரியா, இத்தாலி, ஸ்பானியா இடங்களில் பல்லாயிரக்கணக்கானவர்களை திருமறையில் சேர்த்தார். யூதேயாவில் மார்ச் 25ம் நாள் கி.பி. 42ம் ஆண்டில் ஏரோது மன்னன் அக்கிரிப்பாவால் தலை, கழுத்து அறுபட்டு, திருத்தூதர்களில் முதல் மறைசாட்சியாக மரித்தார். இவரது உடல் இஸ்பானியாவில் உள்ள கம்போஸ்தெல்லாவில் கல்லறைமீது திருத்தலமாக கட்டப்பட்டுள்ளது. இது ஐரோப்பாவில் புகழ்பெற்று விளங்குகிறது. இவரின் குணநலன்களை நாமும் பெற இத்திருப்பலி வழியாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்லாயனே இறைவா, திருஅவையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், பொது நிலையினர் அனைவரும் இறைவனின் திருவுளப்படி வாழ்ந்திட தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நலம் நாடும் நல்லவரே இறைவா, பங்கிலுள்ள குடும்பங்கள் அன்பியங்களாக இயங்கி, எந்தவித எதிர்ப்பார்ப்புமின்றி ஒருவருக் கொருவர் அன்பு செய்து ஒரே குடும்பமாக வாழும் நல்ல மனதைத் தந்து பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. குணமளிக்கும் வள்ளலே எம் இறைவா, வானக மருத்துவராக பலவிதமான விநோத தொற்று நோய்கள், தீராத வியாதிகளால் பாதிக்கப்பட்டு வாழ்வோரை, உமது தெய்வீக ஆற்றலால் குணப்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. நீதியின் தலைவரே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் நீதி, நேர்மை, தியாக மனப்பான்மை உடையவர்களாகவும், மக்களின் தேவைகளை நிறைவேற்றிட தாராள உள்ளம் கொண்டவர்களாக திகழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 26.07.2023 புனிதர்கள் சுவக்கின், அன்னாள் விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

இன்று மரியன்னையின் பெற்றோர்களான புனித அன்னா புனித சுவக்கீன் இவர்களின் விழாவினை சிறப்பிக்க திருஅவை நம்மை அழைக்கின்றது. எபிரேய மொழியில் சுவக்கீன் என்றால் இறைவன் தயாரிக்கிறார் என பொருள். இவர்கள் கலிலேயாவிலிருந்து எருசலேம் வந்து அங்கேயே வாழ்ந்தனர் என குழந்தைப் பேரின்றி இறைவனை வேண்டி அன்னையை பெற்றெடுத்ததாக கூறப்படுகிறது. அதனால் தான் அன்னை மரியை இறைவனுக்கு அர்ப்பணித்து அதற்காகவே தயாரித்தனர் என அறியலாம். அன்னை இறைவனையே தாங்கிப் பெற்றெடுத்ததால் அவரது பெற்றோர் கொண்டாடப்பட வேண்டியவர்களே. இறைவனுக்காகவே அன்பானவர்களாக அர்ப்பணிப்பு உள்ளவர்களாக வாழ நம்மையும் நம் குடும்பம், சமூகம், நாடு, உலகம் அனைத்தையும் தயாரிப்பவர்களாக மாற வேண்டுமென்று இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், கர்தினால்கள், குருக்கள், இருபால் துறவியர்கள், நற்செய்தி அறிவிக்கும் பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரும் புனிதர்களைப்போல் மக்களை நல்வழியில் நடத்தும் அருள்வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, பள்ளி, கல்லூரிப் படிப்பு முடிந்து உயர் கல்விக்கும் வேலை வாய்ப்பிற்கும் அலையும் எம் பிள்ளைகளுக்கு எதிர்காலத்தில் நல்லதொரு கல்வியையும், வேலை வாய்ப்பினையும் அளித்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கம் நிறைந்த இறைவா, நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்பதுபோல் ஒவ்வொரு குடும்பமும் இறைவழி நடந்து அன்பு பாதையில் குழந்தைகளை வளர்க்கவும், இறைஞானத்தில் சிறந்து உம் பணி செய்ய, உம் வழியில் நடக்க தேவையான அருள்கொடைகளை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 28.07.2023 புனித அல்போன்சா முட்டாத்துப் படத்து திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இவர் இந்திய நாட்டின் முதல் புனிதராவார். இவர் திருவிதாங்கூர் சமஸ்தானம், குடமளூர் என்னும் ஊரில் (தற்போதைய கேரள மாநிலம் - கோட்டயம் மாவட்டம்) 1210ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19ம் நாள் ஜோசப் மரியன், மேரி தம்பதியருக்கு மகளாய்ப் பிறந்தார். புனித அன்னாவின் நினைவாக "அன்னக்குட்டி" என்று பெயரிடப்பட்டு இவரை அழைத்தனர். இளம் வயதில் தனது தாயாரை இழந்து விட்டார். இவரது பெரியப்பா ஜோசப் என்பவர் இவரை படிக்க வைத்தார். 1923ம் ஆண்டு எரியும் நெருப்புக்குழிக்குள் தவறி விழுந்த அன்னாவுக்கு பாதங்கள் கருகிப்போய் விட்டது. தன் வாழ்வை கிறிஸ்துவுக்காக அர்ப்பணிக்க விரும்பிய இவர் 1928ம் ஆண்டு "அல்போன்ஸா" என்ற பெயரைப் தாங்கி அருட்சகோதரியாக மாறினார். கடும் நிமோனியா காய்ச்சல் தாக்கி, படுத்தப் படுக்கையானார். இந்த நிலையில் உடல்நிலை மேலும் பாதிக்கப்பட்டு தனது 35வது வயதில் 1946ம் ஆண்டு ஜூலை 28ம் நாள் அல்போன்ஸா இறைவனடிச் சேர்ந்தார்.

இவரது உடல் பரணங்கனத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவருடைய கல்லறையில் 1999ல் ஒரு பச்சிளங்குழந்தையின் வளைந்த பாதங்கள் குணப்படுத்தப்பட்டது. இதுதான் இவருக்கு புனிதர் பட்டம் வழங்குவதற்கு காரணமாய் அமைந்தது. 2008ம் ஆண்டு அக்டோபர் 12ம் தேதி இவருக்கு திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களால் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. இவர் உடல்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாவலராவார். இவரின் நம்பிக்கையில் நாமும் உறுதிகொண்டவர்களாய் வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, நீர் உருவாக்கிய திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் தங்கள் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து, தங்கள் சொல்லிலும், செயலிலும் உம்மை பிரதிபலிப்பவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. நீதியுள்ள நடுவராய் அரியணையில் வீற்றிருப்பவரே, ஆட்சியாளர்கள், தலைவர்கள் அநீதிக்கு துணைபோகாமல், மக்களுக்கு நன்மைப் பயக்கும் விதமாக தங்களை மாற்றிக்கொண்டு செயல்பட வேண்டிய அருளைப்பொழிந்தருள வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆற்றலின் இறைவா, பொதுநலப் பணியிலும் சமூகச் சேவையிலும் ஈடுபடும் அனைத்து மக்களையும் ஆசீர்வதியும். பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், போராட்டங்கள், வன்முறை, கலவரங்கள் அனைத்திலும் தங்கள் நற்பணியை தொடர்ந்து செய்திட தேவையான ஆற்றலையும், மனப்பக்குவத்தையும் தந்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 29.07.2023 புனிதர்கள் மார்த்தா, மரியா, லாசர் விழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய சமூகமே, இன்று நம் திருஅவையானது புனிதர்களாக மார்த்தா, மரியா மற்றும் இலாசர் இவர்களின் விழாவைச் சிறப்பிக்கின்றது. இவர்கள் மூவரும் இயேசுவால் குணமாக்கப்பட்ட தொழுநோயாளி சீமோனின் பிள்ளைகள் என்று விவிலியம் கூறுகிறது. இவர்கள் எருசலேமிற்கு இரு மைல்கள் தூரத்திலிருந்த பெத்தானியாவை சேர்ந்தார்கள். இயேசு எருசலேம் வரும்பொழுதெல்லாம் பெத்தானியாவிலுள்ள இவர்களது இல்லத்திற்கு செல்வது வழக்கம். ஒருசமயம் இயேசு பெத்தானியாவிற்கு சில நாட்கள் வராமலிருந்தபோது லாசருக்கு உடல் நலமின்றி இறந்து போனார். கல்லறைக்குள் வைத்து நான்கு நாட்கள் ஆகிவிட்டது. அந்நேரம் இயேசு மார்த்தாவின் இல்லத்திற்கு வந்தார். மரியாள் அழுதுகொண்டே அவர் பாதத்தில் அமர்ந்து நீங்கள் முன்பே வந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டானே என்று கூறினாள். இயேசுவின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. கல்லறைக்கு செல்வோம் என்று கூறியபோது உடல் வைக்கப்பட்டு நான்கு நாட்களாயிற்றே நாற்றம் அடிக்குமே என்று மார்த்தாள் கூற இயேசுவும் கல்லறைக்குச் சென்று இலாசரை உயிர்த்தெழச் செய்தார்.

மரியா இயேசுவின் பாதத்தில் அமர்ந்து தன்னிடமிருந்த நறுமணத்தைலத்தை இயேசுவின் தலையில் ஊற்றி பூசிவிட்டார். இதைக்கண்ட சிலர் இவ்வளவு விலையுயர்ந்த தைலத்தை வீணடிக்கிறாரே இதை விற்று ஏழைகளுக்கு பயன்படுத்தலாம் அல்லவா என்று பேசிக் கொண்டனர். இதையறிந்த இயேசு "அவர் செய்தது முறையான செயல்தான். நான் எப்போதும் உங்களுடன் இருக்கப் போவதில்லை என் அடக்கத்திற்காக முன்னதாகவே என் உடலுக்கு தைலம் பூசிவிட்டார். உலகம் முழுவதும் எங்கெல்லாம் நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இவர் செய்ததும் எடுத்துக் கூறப்படும். இவரும் நினைவு கூறப்படுவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்று கூறினார். (யோவா.11:2) இதன்மூலம் உடன்பிறப்புக்களான மார்த்தா,

மரியா, லாசர் மூவரும் இயேசுவின் அன்பை பெற்றவர்கள் என அறிந்து மரியாள் தன் பங்கை அறிந்து செய்ததுபோல நாமும் இயேசுவின் அன்பை பெற்று அவரது மாட்சிமைக்கு தலைவணங்கி வாழ இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் வானகத் தந்தையே இறைவா, திருஅவையின் வழித்தோன்றல்களான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் மரியா தன் பங்கைத் தேர்ந்துக்கொண்டதுபோல இயேசுவின் இறைவார்த்தையை தங்கள் இலட்சியமாக ஏற்றுப் பணிபுரிய இவர்களுக்குத் தேவையான அனைத்து ஆற்றல்களையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தீயவை விலக்கி நன்மை பயக்கும் இறைவா, இக்காலச் சூழலில் எங்களுக்கு ஏற்படுகின்ற இயற்கை பேரிடர்கள், காலச்சூழல்கள், நோய்நொடிகள், தீவிரவாத செயல்கள் இவற்றினால் பாதிக்கப்பட்டு வாழ வழியின்றி தவிப்போரை உம் கருணையினால் ஆசீர்வதித்து நல்வாழ்வளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, நாங்கள் வாழும் வாழ்க்கை உமக்கெதிரானதாக இருந்தால் அவற்றிலிருந்து நாங்கள் விடுபட்டு, உம் பாதச்சுவட்டில் தடம் பதித்து வாழும் வழியை எங்களுக்கு காண்பித்து அவற்றில் நடக்கத் தேவையான அனைத்து ஆற்றல்களையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 30.07.2023 பொதுக்காலம் 17ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. 1அர. 3: 5,7-12 II. உரோ. 8: 28-30 மத். 13: 44-52

ஆண்டவரின் ஆசிப்பெற்ற திருக்கூட்டமே இன்று ஆண்டின் பொதுக்காலம் 17ம் ஞாயிறு. தேடுதல் எல்லா உயிர்க்கும் சொந்தமான ஒன்று. கண்ணுக்குப் புலப்படாத இறையாட்சியின் பலதன்மை பறைசாற்றப்படுகிறது. அது எத்தகையது, எவ்வளவு உயர்வானது, அது தரும் மகிழ்ச்சி வாழ்வு எப்படிப்பட்டது என்பது உவமைகளாக விளக்கப்படுகிறது. இறையாட்சியை பொன் பொருள் கொடுத்து வாங்க முடியாது. நமது நல்ல சொல் செயல்களாலும் இறை நம்பிக்கை நிறைந்த நன் மதிப்பீடுகளால் மட்டுமே தக்க வைத்துக்கொள்ள முடியும். இறைவன் மட்டுமே இறையாட்சியில் வாழும் உரிமையை கொடுக்கக் கூடியவர். இறையாட்சியின் விழுமியங்களான அன்பு, மகிழ்ச்சி, நீதி, மன்னிப்பு, உண்மை, அமைதி, இரக்கம், சகோதரத்துவம் உள்ள இடத்தில் இறைவன் இருக்கின்றார் இறையாட்சியும் இருக்கின்றது. சாலமோன் நீதி வழங்கும் ஞானத்தை தேடினார்.

தாவீது அருள்தரும் நியமங்களை தேடினார். அன்னை மரியாள் இறைவிருப்பம் நிறைவேற்றுவதையே தேடினாள். புனிதர்கள் இயேசுவின் விருப்பத்தையே தேடினார்கள். நமது தேடல்கள் எந்த நோக்கத்தில் உள்ளது? எதைத் தேடுவோம்? அன்றாடம் பணம், பதவி, பொருள், பொன் இவற்றைத் தேடி சுகம் தேடும் பறவைகளாய் தினமும் உலக காரியங்களைத் தேடுகிறோம். இவைகள் நமக்கு இறையரைசப் பெற்றுத்தராது எனினும் தேடுகிறோம். ஒன்றை இழக்கும்போதுதான் மற்றொன்றைப் பெற முடியும். தாய் தன் குழந்தையைப் பெற தன்னுயிரையே இழக்கின்றாள். மானிடம் வாழ்வு பெற தன் மகனை இழந்தாள் மரியாள். இறையாட்சியின் புதையலைப் பெற இறையாட்சிக்கு தடையாய் இருக்கிற சில செயல்களை நாம் அழித்தாக வேண்டும். நமது வாழ்வில் இறை விருப்பத்தை நிறைவேற்ற நாமும் சிறந்த செயல்களை செய்ய இறைவனின் அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணக இறைவா, எம் திருஅவைப் பணியாளர்கள் அனைவரும் இறையாட்சி அறிவிப்பு பணியில் ஊக்கம் குறையாமல் உழைக்கத் தேவையான ஆற்றலை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆட்சிப் பீடங்களை அமைக்கும் தலைவர்களை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இறையாட்சியின் விழுமியங்களை உள்வாங்கி தெளிந்த மனதுடன் நாட்டின் இறையாண்மைப் பணியினை செய்ய அவர்களுக்கு தேவையான அனைத்து அருள்வரங்களையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இறையாட்சியின் இரகசியங்களை அறிவித்த இறைவா, இங்கு கூடிசெபிக்கும் நாங்கள் உலகத் தேடல்களின் மத்தியில் இறையாட்சியின் விழுமியங்கள் முதன்மையானது என்பதை உணர்ந்து, உமது இரக்கப் பெறுக்கத்தினால் தகுதியானவர்களாக வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. இறையாட்சி ஏழை எளியோருக்குரியது என்ற இறைவா, இவ்வுலகில் ஏழ்மை, எளிமை, கீழ்ப்படிதல், அமைதி, சகோதர மனப்பான்மை, உண்மை, நீதி போன்ற உணர்வுகளுடன் வாழ்வோருக்கு நீர் அருளும் இறையாட்சி சொந்தமாகிட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 31.07.2023 லொயோலா நகர் புனித இஞ்ஞாசியார் திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக்கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்தால் அவனுக்கென்ன பயன் கிடைக்கும் (மத்.16:26) என்ற இயேசுவின் உயரிய வாக்கினை நெஞ்சிலே நிறுத்தி இன்று

உலகமெல்லாம் பரந்து விரிந்து செயலாற்றிக்கொண்டிருக்கும் இயேசு சபையின் நிறுவுனர் புனித லொயோலா இஞ்ஞாசியாரின் விழாவினை திருஅவை இன்று கொண்டாடுகின்றது.

இப்புனிதர் ஸ்பெயின் நாட்டில் ஓர் உயர்குலத்தில் ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்தார். இவர் பல ஆண்டுகள் படைவீரராக பணியாற்றினார். ஒருமுறை எதிர்பாராத விதமாக எதிரியின் பீரங்கி இவரின் காலை துளைத்தது. மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவந்த இவருக்கு பொழுதுபோக்கிற்காக இரண்டு புத்தகங்கள் கொடுக்கப்பட்டது. 1. புனிதர்களின் வரலாறு, 2. இயேசுவின் வாழ்க்கை வரலாறு. இப்புத்தகங்களை மிகவும் ஆர்வமாகவும், ஆழமாகவும் படித்தார். இயேசுவின் வாழ்க்கை இவரை கவர்ந்திடவே இயேசுவுக்காக வாழவேண்டுமென்று முடிவெடுத்தார். செபவாழ்வில் ஈடுபட்டார், தன் பாவ வாழ்க்கையை விட்டு விலகி புனிதர்களின் பாதையில் தானும் வாழ வேண்டுமென்று பேரார்வம் கொண்டார். புனித பிரான்சிஸ்கு அசிசியாரின் வாழ்க்கை அவரை மிகவும் கவர்ந்தது. தன் சொந்த பந்தங்களையும், சொத்துக்களையும் துறந்தவராய், புனிதர்கள் இறைவனுக்காக எவ்வளவோ செய்திருக்க "நான் ஏன் செய்யக்கூடாது" என்று தன்னையே அடிக்கடிக் கேட்டுக்கொண்டார்.

இப்புனிதர் அதிகமாக வலியுறுத்துவது, அனைத்தையும் "இறைவனின் அதிமிக மகிமைக்காக செய்யுங்கள்" என்பதே. இவையே இவரது வாழ்வில் மிகவும் முக்கியமான நோக்கமாக இருந்தது. இவரது புண்ணிய வாழ்வையும், ஞானத்தையும் கண்ட சிலர் இவருடன் சேர்ந்தார்கள். இவ்விதமே இயேசு சபை ஆரம்பமாயிற்று. இப்புனிதர் தனது கடைசி காலங்களில் மலேரியா, வயிற்றுவலி போன்ற நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டு இறுதிவரை தன் துன்பங்களையும், வேதனைகளையும் இறை மகிமைக்காக ஏற்றுக்கொண்டு மரித்தார். திருத்தந்தை 5ம் பவுல் இஞ்ஞாசியாருக்கு 1609 ஜூலை 27ல் அருளாளர் பட்டமளித்தார். திருத்தந்தை 15ம் கிரகோரியார் 1622, மார்ச் 12ம் நாள் இவருக்கு புனிதர் பட்டமளித்தார். இவர் "ஆன்மீக பயிற்சிகள்" மற்றும் தியானங்களின் பாதுகாவலராக கருதப்படுகிறார். இப்புனிதரின் வழ்வை மேல்வரிச் சட்டமாகக் கொண்டு நமது வாழ்வை அமைத்துக்கொள்ள அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, உம்முடைய திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் அனைவரையும் தூய ஆவியானவரின் வரங்களால் நிரப்பி, செல்லும் பாதையில் இடையூறுகள், துன்பங்கள், துயரங்கள் ஏற்படாமல் நீரே உடனிருந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, அனைத்தையும் இறைவனின் அதிமிக மகிமைக்காக செய்வோம் என்று கூறிய புனிதர் லொயோலா இஞ்ஞாசியாரைப்போல நாங்களும் எங்கள் செயல்கள் அனைத்தையும் உம்முடைய மகிமைக்காக செய்யும் நல்ல மனதைத் தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான தந்தையே, திருஅவையின் வளர்ச்சிக்காக உழைத்துவரும் இயேசு சபை நிறுவனத்தையும், அதில் பணிபுரிவோர் அனைவரையும் ஆசீர்வதித்து உமது பேரிரக்கத்தால் பாதுகாக்கவும், இவர்களுக்கு எதிராக ஏற்படும் அனைத்து பிரச்சனைகளிலிருந்தும் பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## புனித தோமாவின் நம்பிக்கை நம்மை வாழ வைக்கும்

திரு. பி. விக்டர்

ஒவ்வொரு ஆண்டும் ஜூலைத் திங்கள் மூன்றாம் நாள் நமது இந்தியாவின் திருத்தூதர் புனித தோமாவின் நினைவு தினத்தைச் சிறப்பிக்கின்றோம். புனித தோமாவைக் குறித்து திருவிவிலியத்தில் மிகக் குறைந்த அளவிலேயே குறிப்புகள் உள்ளன. அவற்றிலிருந்து புனித தோமா இயேசுவின்மீது வைத்திருந்த அன்பையும் நம்பிக்கையையும் நாம் அறிய முடிகிறது. புனித தோமா இயேசுவின்மீது வைத்திருந்த நம்பிக்கையானது நாம் நமது ஆண்டவர் இயேசுவின்மீது வைக்கிற நம்பிக்கையை வளர்க்கிறதாக இருக்கிறது. இது குறித்து சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

திருவிவிலியத்தில் புனித தோமாவின் பெயர் பன்னிரெண்டு திருத்தூதர்களின் பெயர் பட்டியலில் தான் முதன் முதலாகக் காணப்படுகிறது (மத்.10:3, லூக்.6:15). இதன்மூலம் புனித தோமா இயேசுவுடன் இணைந்துள்ளார், அவரோடு உணவு அருந்தியுள்ளார், அவரோடு உறங்கியுள்ளார், அவரோடு பயணித்துள்ளார், அவரது திருவார்த்தைகளை அதிகம் கேட்டுள்ளார், இயேசு செய்த அருஞ்செயல்களை அருகிலிருந்து பார்த்து பரவசமடைந்துள்ளார். மூன்றாண்டு காலம் இயேசுவுடன் இணைந்து வாழ்ந்துள்ளார். சீடர்களில் ஒருசிலர் அவரைவிட்டு விலகிச் சென்றபோதுகூட இவர் அவர்களோடு செல்லாமல் இயேசுவோடு இருந்துள்ளார். இறைப்பணி செய்ய, நற்செய்தி அறிவிக்க இயேசுவினால் அனுப்பப்பட்டு இறைப்பணி செய்து தனது பயிற்சியை நிறைவு செய்துள்ளார். புனித தோமா இயேசுவோடிருந்து கற்றுக்கொண்ட பயிற்சிகளையும், பாடங்களையும், அனுபவங்களையும், போதனைகளையும் நாம் பெற்றுள்ளோமா?

நமது வாழ்வில் ஒவ்வொரு நாளும் எவ்வளவு நேரம் இயேசுவோடு இருக்க ஒதுக்குகிறோம், "ஒரு மணிநேரம் என்னோடு விழித்திருக்க

உன்னால் முடியாதா"? (மத்.26:40) என்று இயேசு நம்மைப் பார்த்துக் கேட்கின்றார். நாம் எவ்வளவு நேரம் இயேசுவோடு தனித்திருக்க நம்மைப் பக்குவப்படுத்தியுள்ளோம்? இயேசுவோடு தோமா பயணித்ததுபோல நமது பயணங்களில் ஆண்டவர் இயேசுவை துணைக்கு அழைத்துச் செல்கிறோமா? "நீ என்னை உண்மையாக அழைத்தால் நான் உன் அருகிலேயே இருப்பேன்" (திபா. 145:18) என்று ஆண்டவர் நமக்கு வாக்கு கொடுத்திருந்தாலும் நாம் அழைக்கிறோமா? "என் கூடவே இரும், ஓ இயேசுவே, நீர் இல்லாமல் நான் வாழ முடியாது" என்று உள்ளம் உருகும் விதமாகப் பாடுகிறோம். ஆனால் அதை உணர்வில், உள்ளத்தில், உண்மையில் இயேசுவுக்கு வெளிப்படுத்தியுள்ளோமா? புனித தோமா மூன்றாண்டுகள் தொடர்ந்து இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு வளர்ந்தார். தோமாவைப் போல நாம் நமது வாழ்வில் இறைஇயேசுவின் வார்த்தைகளுக்கு எவ்வளவாக செவிமடுக்கிறோம்?

தோமாவைக் குறித்துப் பேசும்போது "நம்பாத் தோமா" என்று கேலியாகக் குறிப்பிடுவது வழக்கமாக நம்மிடையே உள்ளது. யாருக்காவது "தோமா" என்கிற பெயர் இருக்குமானால் நம்மில் பலர் அவரை "நம்பாத் தோமா" என்றே அழைத்திருப்போம். ஏன் இந்த பெயர் தோமாவுக்கு? உயிர்த்தெழுந்த இயேசு முதல் முறை சீடர்களைச் சந்திக்க வந்தபொழுது தோமா அவர்களுடன் இல்லை. அவர் வந்தவுடன் அங்கிருந்த மற்ற சீடர்கள் அனைவரும் பேதுருவுடன் இணைந்து இயேசு உயிர்த்ததையும், தங்களை வந்து சந்தித்ததையும் அறிவிக்கின்றனர். ஆனால் அவர்கள் கூறியதை தோமாவால் நம்ப முடியவில்லை. காரணம் இயேசு உயிர்த்ததை தோமாவுக்கு அறிவித்தவர்களில் முதலாமவர், "பேதுரு" இவர் இயேசுவை மூன்றுமுறை தெரியாது என்று மறுதலித்தவர். இயேசுவைத் தெரியாது, என்று சபிக்கவும், ஆணையிடவும் தொடங்கியவர். இந்த "பேதுரு" சொன்னால் எவ்வாறு நம்புவது? மற்றவர்கள் அனைவரும் இயேசுவின் சிலுவைப் பயண நேரத்தில் பயந்து ஓடி ஒளிந்துக் கொண்டவர்கள். எனவே அவர்கள் கூறியதையும் தோமாவால் நம்ப முடியவில்லை.

நமது இன்றைய வாழ்க்கைச் சூழலில் இறை வார்த்தைகளின்படி நடக்காத ஒருவர், சாட்சிய வாழ்வு வாழாதவர் அல்லது திருவிவிலியத்தை இயேசுவை நம்பாத ஒருவர் ஆண்டவர் இயேசுவைக் குறித்துச் சொன்னால் நாம் என்னச் சொல்வோம்? சாத்தான் வேதம் ஓதுகிறது என்று சொல்லமாட்டோமா? இதே நிலைதான் அன்று தோமாவுக்கு நிகழ்ந்தது. அதனால்தான் இயேசு மீண்டும் அவர்களுக்குத் தோன்றி, தோமாவின் சந்தேகத்தை நிவர்த்தி செய்து தாம் உயிர்த்தெழுந்து, உயிரோடு இருப்பதை உறுதிப்படுத்தினார். உடனே தோமா, "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" (யோவா. 20:28) என்று தனது நம்பிக்கை அறிக்கையை வெளியிட்டார். இயேசு விண்ணேற்பு அடைந்தபொழுது அவரோடு இருந்தவர்களில் சிலர், "ஐயமுற்றனர்" (மத். 28:17) என்று திருவிவிலியம்

பதிவு செய்துள்ளது. இத்தகைய ஐயமுற்றோர் மத்தியில் "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்று தோமா துணிந்து அறிக்கை செய்து, அன்று ஐயமுற்று இருந்தவர்களின் நம்பிக்கையைப் பெருகப்பண்ணிய தோமாவின் நம்பிக்கை, நம்முடைய நம்பிக்கையையும் பெருகச் செய்யும் என்று நிச்சயம் நம்பலாமன்றோ.

இத்தகைய நம்பிக்கையைக் கொண்டுதான் தோமா அவர்கள் நெடும் பயணம் மேற்கொண்டு, பல நாடுகளைக் கடந்து, இந்தியா வந்தார். முதன் முதலில் கேரள மாநிலத்தில் தனது திருப்பணியை நற்செய்தி அறிவிப்புப் பணியைச் செய்த தோமா சென்னையிலும் நற்செய்தி அறிவித்தார். கேரளத்தில் ஏழு இடங்களில் ஆலயங்களைக் கட்டி திருஅவையை நிறுவி இயேசுவின்மீதுள்ள நம்பிக்கையைப் பெருகச் செய்தபின் முன்வந்து பணி செய்ததாக வரலாறு கூறுகிறது. வழி தெரியாது, மொழி தெரியாது, தெரிந்தவர்கள் கிடையாது, எதிர்ப்புகளோ ஏராளம், இதன் மத்தியிலும் இறைப்பணி ஆற்ற முடிந்தது. காரணம், "உயிர்த்த இயேசுவின்மீது கொண்டிருந்த நம்பிக்கையே". அன்றைய சென்னையில் நற்செய்தி அறிவித்து அரச குலத்தவரில் சிலரை கிறிஸ்தவர்களாக மாற்றியதால் அரசனால் பகைக்கப்பட்டார். ஆனாலும் இயேசு கற்பித்த வாழ்க்கை முறைதான் சிறந்த வாழ்க்கை முறை என்பதை நிச்சயமாக நம்பினார். இந்த நம்பிக்கையைப் பறைச்சாற்றி பலரை கிறிஸ்தவர்களாக்கினார்.

இதனால் மரண தண்டனை விதிக்கப்பட்டு "தோமா மலை" என்று இன்று நாம் கூறுகின்ற மலையுச்சியில் இறைமகன் இயேசுவுடன் செபத்தில் இணைந்திருந்த வேளையில் மறைந்திருந்த அரசனின் காவலர்கள் அவரை ஈட்டியால் குத்தி கொலை செய்தனர். அவரும் இரத்த சாட்சியாக மரித்தார். "அவரோடு செல்வோம், அவரோடு மரிப்போம்" என்ற தோமாவின் வார்த்தைகள் நம்மை இயேசுவோடு இணைக்கட்டும், அவரோடு பயணிக்க உதவுட்டும், நம்மைச் சுற்றி எதிர்மறை எண்ணங்கள், சிந்தனைகள், செயல்கள் இருந்தாலும் "நான் இயேசுவோடு இருக்கிறேன், அவர் என்னைத் தனியே விடமாட்டார்" என்கிற இந்த உணர்வு நம்மைப் பலப்படுத்தி வழி நடத்தட்டும். "நீரே என் ஆண்டவர், இயேசுவே நீரே என் கடவுள்" என்கிற இந்த நம்பிக்கை அறிக்கையை நமதாக்கிக்கொள்வோம். என்னை அன்பு செய்து என்னை வழிநடத்துகிற இயேசுதான் என் கடவுள். இந்த எண்ணம் இந்த நம்பிக்கை நம்மை இயேசுவைவிட்டு விலக வைக்காது.

புனித தோமா கொடுத்த இந்த நம்பிக்கை நம் நம்பிக்கையைப் பெருகச் செய்துள்ளது. தோமாவின் நம்பிக்கையைக் கைக்கொண்டு இயேசுவை நம்புவோம், இயேசுவுக்கு சாட்சியாய் வாழ்வோம், அநேகரை இயேசுவின் நம்பிக்கையாளர்களாக மாற்றுவோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

# அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் - வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

நிக்காரகுவா என்ற ஊரில் 1902 ஜனவரி மாதம் 13ம் நாள், வசதியுள்ள தம்பதியருக்கு மரிய ரொமேரோ மெனேஸஸ் பிறந்தார். தனது தந்தை இந்நாட்டு ஜனநாயக கட்சியில் அமைச்சராக அதிலும் இரக்கமும், தாராள மனமும் கொண்ட அமைச்சராக மக்களுக்கு பணியாற்றுபவர். நாம் துன்பத்தில் இருந்தாலும் பிறருக்கு உதவியாக இருப்பதும் எவ்வளவு அவசியமானது என்பதை நடைமுறையில் கற்றுக் கொண்டார் ரொமேரோ. வாழ்வில் உயரிய இடத்தைப் பிடித்து செழிப்போடு வாழ எல்லா விதத்திலும் ரொமேரோவுக்கு ஊக்கமாக இருந்தார்கள் தனது குடும்பத்தினர். பியானோ, வயலின் என இசை கருவிகளை நன்கு கற்றுத் தேர்ந்தார்.

## தனது பன்னிரெண்டு வயதில் சலேசிய கன்னியர்கள் நடத்தும் கல்லூரியில் சேர்தல்

பன்னிரெண்டு வயதில் சலேசிய கன்னியர்களால் நடத்தப்படும் கல்லூரில் சேர்ந்து மகிழ்ச்சியோடு தனது பள்ளி நாட்களை அனுபவித்தார். அங்குதான் தொன் போஸ்கோவின் தனிவரம் தனக்காகவே உருவாக்கப்பட்டதுபோல ரொமேரோ உணர்ந்தார். "பன்னோக்கு மன்றம்" எனப்படும் ஆரட்டரியில் தன்னை இணைத்துக்கொண்டு, இசை பயிற்சி ஆசிரியராக பணியாற்றும்போது, ரொமேரோவின் வாழ்வில் முதல் முறையாக ஏழ்மையில் வாழ்கின்ற இளம்பெண்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. 1919ல் சலேசிய கன்னியர்கள் சபையில் சேர்ந்தார். தனது நித்திய வார்த்தைப்பாட்டிற்கு பிறகு, கோஸ்டா ரிக்காவில் உள்ள சான் ஜோஸ் என்ற இடத்திற்கு அனுப்பட்டார். அதுமுதல் அவ்விடமே அவருக்கு இரண்டாவது தாய் இல்லமாகவே மாறியது.

## உடல் பொருள் ஆவி அனைத்தும் "ஏழ்மையான ஆதரவற்ற" சிறார்களையே நாடியது

வசதி படைத்த இளம் பெண்கள் பயிலும் கல்லூரியில் ஆசிரியப்பணிக்காக அனுப்பட்டார் ரொமேரோ. ஆனால், இவரோ தொன் போஸ்கோவை போன்றே "ஏழை எளிய ஆதரவற்ற" சிறார்களையே தனது வாழ்வின் இலட்சியங்களாக கொண்டார். ஆரட்டரி எனப்படும் பன்னோக்கு மன்றத்தில் பணியாற்ற, தனது மாணவர்களில் சிலரை தேர்ந்தெடுத்து, அவர்களை இளம் சீடர்களாக உருவாக்கி, அதற்கு 'las misioneritas' அதாவது இளம் மறைப்பணியாளர்கள் என்று பெயரிட்டு வழிநடத்தினார். இவர்களைக் கொண்டு சிறுவர் சிறுமியர்க்கு உணவு, உடை மற்றும் கல்வி பெற வசதி செய்து கொடுத்தார். மேலும் வறுமையில் வாழுகின்ற மக்களின் இருப்பிடங்களுக்கு சென்று, அவர்களுக்கு தேவையான வசதிகளையும், சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்தி, சுகாதார உதவிகளையும், கல்வி, உணவு,

உடைகளையும் மற்றும் மறைக்கல்வியையும் அளித்து கவனித்து வந்தனர். இது போன்ற "ஏழை எளிய சிறார்களுக்கென" 36 ஆரட்டரிகளை துவங்கி பிறரன்பு பணிகளை ஊக்குவித்து செயல்படுத்தினார் மரிய ரொமேரோ.

அனைத்து மக்களின் சகாய அன்னையை தனது அரசியாக ஏற்றுக்கொண்ட ரொமேரோ அந்த அன்னையின் வழியாக தனது பணிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் பல உபகாரிகளின் மூலம் கிடைத்து வந்தது குறிப்பிடத்தக்கது. மருத்துவர்களின் தன்னார்வத் தொண்டு மற்றும் உதவிகளால், மருத்துவ சிகிச்சை, மருத்துவம் சார்ந்த முன்கள பணிக்கான வசதி கொண்ட மையம், கல்வியாளர் மற்றும் மறைக்கல்வி மேம்பாட்டு கூடங்கள், செபிப்பதற்கு ஏதுவாக சிற்றாலயம் என அனைத்து வசதிகளையும் கொண்ட பன்னோக்கு மருத்துவமனையை கட்டினார்.

**"சகாய அன்னையின் கோட்டை" உருவெடுக்க காரணியானவர்**

ஒத்த சிந்தனையுடைய கத்தோலிக்க பொதுநிலை இயக்கத்தின் "Asociación Ayuda a los Necesitados" தாராள உதவிகளால், ஏழைகளுக்கு "சகாய அன்னையின் கோட்டை" என்ற பெயரில் வீட்டுவசதி திட்டங்களை உருவாக்கி, அதன் வழியாக வறுமையின் விளிம்பில் சிக்கி வீதிகளில் தஞ்சம் புகுந்து தவிக்கும் மக்களுக்கு வீடுகளை கட்டிகொடுத்தார். இன்றும் இப்பணி தொடர்ந்து செயல்பட்டு வருவதை நாம் பார்க்கின்றோம். சலேசிய சபைகளில் ஒன்றான அனைத்து மக்களின் சகாய அன்னை மீதான பக்தியை பரப்ப, சான் ஜோஸ் என்னுமிடத்தில் அழகிய ஆலயத்தை எழுப்பினார். மரியன்னை மீதான தனது பக்தியின் காரணமாக, நினைத்தவைகளை நிறைவேற்றிட, அந்த அன்னையின் வழியாக கிடைத்த உபகாரிகளை கொண்டு பல்வேறு பிறரன்பு பணிகளை செய்ய முடிந்தது என்பதை ரொமேரோ நமக்கு நிரூபித்துள்ளார்.

தொன் போஸ்கோவைப் போல, மரிய மசரெல்லோவைப் போல, ரொமேரோவும் திட்டமிட்டு செயல்படுவதில் வல்லவராக திகழ்ந்தார். அவரின் இறைபக்தியின் உச்சமே, பலருக்கு ஆன்ம வழிகாட்டியாகவும், ஆற்றுப்படுத்துபவராகவும் நிலைநிறுத்தியது. இறை நம்பிக்கையில் உறுதியும், பணியில் தெளிவும், வாழ்வில் வெளிப்படையான தன்மையும் பெற்றிருந்த மரிய ரொமேரோ, சிறப்பான ஆசிரியராக, மறைக்கல்விப் பயிற்றுவிப்பாளராக, கலைஞராக, மருத்துவ உதவியாளராக, சிறார்களுக்கு நல்லதொரு தாயாக, ஏழை எளிய ஆதரவற்றவர்களுக்கு புகலிடமாக, அடைக்கலமாக வாழ்ந்தவர். 1977, ஜூலை 7ம் நாள் மாரடைப்பின் காரணமாக காலமானார். 2002ல் திருஅவையினால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். உணவு, கல்வி, மருத்துவம், வீட்டு வசதி என ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய அனைத்தையும் எந்த ஒரு தனிநபரும், இறை நம்பிக்கையும், ஒத்த கருத்துடைய நல்லுள்ளங்களின் உதவியாலும் சிறப்பாக செய்ய முடியும் என்பதற்கு மரிய ரொமேரோ ஒரு சிறந்த முன்மாதிரி என்றால் அது மிகையாகாது.

# புனித அல்போன்சா முட்டாத்துப் படத்து

திரு. டே ஆக்னல் ஜோஸ்

இந்தியாவின் முதல் பெண் புனிதரான அல்போன்சா முட்டாத்துப் படத்து நினைவை ஜூலை 28ந்தேதி கத்தோலிக்கத் திருஅவை சிறப்பித்து மகிழ்கிறது. எத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்தாலும், முழு மனத்தோடு தம்மை கடவுளுக்கு அர்ப்பணிக்கும் ஆன்மாக்கள் புனிதத்தின் மேன்மையை அடைய முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இவரது வாழ்வு அமைந்துள்ளது. குடும்பத்தில் எழுந்த பல்வேறு எதிர்ப்புகளையும்மீறி, துறவறத்தில் நுழைந்து இயேசுவின் அன்புக்குரிய ஞான மணவாட்டியாக வாழ்ந்தவர் புனித அல்போன்சா. கேரளாவின் கோட்டயம் மாவட்டத்தில், 1910 ஆகஸ்ட் 19ந்தேதி குடமலூர் என்ற சிற்றூரில் சீரோ-மலபார் கத்தோலிக்க குடும்பத்தில் இவர் பிறந்தார். இவரது தந்தை பெயர் ஜோசப், தாயின் பெயர் மேரி. இவர் பிறந்த எட்டாம் நாளில் (1910 ஆகஸ்ட் 27ந்தேதி) "அன்னா முட்டாத்துப் படத்து" என்ற பெயருடன் இவருக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டது. இவர் குழந்தையாக இருந்தபோதே, இவரது தாய் இறந்துவிட்டார். சிற்றன்னையின் பராமரிப்பில் வளர்ந்து வந்த இவரை அனைவரும் "அன்னக்குட்டி" என்று செல்லமாக அழைத்தனர்.

இவர் மூன்று வயதிலேயே தோல் நோய் பாதிப்பால் துன்பத்திற்கு ஆளானார். கிறிஸ்தவ பக்தி ஒழுக்கத்தில் வளர்க்கப்பட்டாலும், சிற்றன்னையின் கண்டிப்பான குணத்தால் மனதளவில் பெரிதும் நெருக்கடிகளை சந்தித்தார். குருவாக இருந்த இவரது பெரியப்பாவின் உதவியோடு இவர் தொடக்கக் கல்வி கற்றார். 1916ல் பள்ளிப் படிப்பைத் தொடங்கிய இவர், பிறருடன் அதிகம் பேசாமல் இருந்ததால் "ஊமை" என்று கேலி செய்யப்பட்டார். 1917 நவம்பர் 27ந்தேதி நற்கருணையில் இயேசுவின் திருவுடலை முதன்முறை உட்கொண்டார். 1920ல் தொடக்கக் கல்வி முடிந்ததும், சிற்றன்னையின் வீட்டுக்குத் திரும்பினார். அங்கு இவரது பாட்டி, கிறிஸ்தவ செபங்கள், பாடல்கள் மற்றும் புனிதர்களின் கதைகளை இவருக்கு கற்றுக் கொடுத்தார். இவரைத் தங்கள் பிள்ளைகளுக்கு மணமுடிக்க விரும்பி, பலரும் பெண் கேட்டு இவரது சிற்றன்னையை அணுகினர். இவருக்குத் திருமணம் செய்து வைக்க நினைத்த வேளையில், அடுப்பில் விழுந்ததால் இவரது பாதங்கள் கருகின. கிறிஸ்துவின் மணவாட்டியாக தம்மை அர்ப்பணிக்க விரும்பி, இவரே நெருப்பில் காலை இட்டதாகவும் கூறப்படுகிறது.

திருமண வாழ்வை விரும்பாத இவர், தமது காலில் ஏற்பட்ட காயங்கள் ஆறியதும் அருள்சகோதரியாக மாற விரும்பினார். 1927ல் ஏழை கிளேர்களின் மூன்றாம் சபையில் சேர்ந்து, தமது பள்ளி படிப்பை முடித்தார். பரணஞானம் என்னும் இடத்திலுள்ள இந்த துறவற மடத்தில், 1928 ஆகஸ்ட்

2ந்தேதி இவர் துறவற ஆடைகளைப் பெற்றுக் கொண்டார். அவ்வேளையில், அன்னா என்ற திருமுழுக்கு பெயருக்குப் பதிலாக "அமல உற்பவத்தின் அல்போன்சா" என்னும் பெயரைத் துறவற வாழ்விற்காகத் தேர்ந்துக் கொண்டார். 1929ல் பள்ளியில் மலையாளம் கற்பிக்கும் ஆசிரியையாக நியமனம் பெற்றார். அதே நேரத்தில் தமது படிப்பைத் தொடர்ந்த இவர், 1931 ஆகஸ்ட் 11ந்தேதி முதல் வார்த்தைப்பாடு கொடுத்தார். பல ஆண்டுகள் தீவிர நோயால் பாதிக்கப்பட்டாலும், இவர் துறவற மடத்தில் அன்புடனும் புன்முறுவலுடனும் பல்வேறு பணிகளை செய்து வந்தார். 1936 ஆகஸ்ட் 12ந்தேதி துறவறத்துக்கான நிரந்தர வார்த்தைப்பாடு கொடுத்து அருள்சகோதரியானார். தமது உடல்நலம் குன்றியதால் ஆசிரியை பணியைத் தொடர்ந்து செய்ய முடியாமல் துன்புற்றார்.

1936 டிசம்பரில் இவருக்கு வந்த கடுமையான காய்ச்சல் மருந்துகளால் குணப்படுத்த முடியாததாக இருந்தது. குழந்தை இயேசுவின் புனித தெரேசா, அருள்தந்தை குரியாக்கோஸ் எலியாஸ் சவரா ஆகியோரின் பரிந்துரையால் தமது நோய் நீங்கியதாக இவர் கூறினார். மற்ற அருள்சகோதரிகள் இவர் மனதைப் பலவிதங்களில் காயப்படுத்தி, பழிச்சொற்களால் இவரைத் துன்பத்திற்கு ஆளாக்கினர். 1939 ஜூன் 14ந்தேதி, இவரைத் தாக்கிய இரட்டை நிமோனியா இவரது பலம் குன்றவும், வேதனைகள் அதிகரிக்கவும் காரணமாக அமைந்தது. எல்லாவித துன்பங்களையும் அல்போன்சா மிகுந்த பொறுமையைக் கடைபிடித்தார். இயேசுவின் திருப்பாடுகளை தியானம் செய்து, தமது வேதனைகளை மணவாளர் இயேசு கிறிஸ்துவுக்காக ஒப்புக்கொடுத்தார். "கோதுமை மணிகள் அரைக்கப்பட்டு அப்பமாகின்றன, திராட்சை பழங்கள் பிழியப்பட்டு ரசமாகின்றன. அவை திருப்பலியில் இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறுகின்றன. அவ்வாறே துன்பங்களால் நசுக்கப்படுகின்ற வேளையில், நாம் கடவுளுக்கு உகந்த மனிதர்களாக மாறுகின்றோம்" என்று இவர் கூறினார்.

காச நோயினாலும் வருந்தி துன்புற்ற இவர், இயேசுவின் பாடுகளை நினைத்து ஆறுதல் அடைந்தார். 1940 அக்டோபர் 18ந்தேதி, திருடன் ஒருவன் அறைக்குள் நுழைந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியில் இவருக்கு அம்னீசியா (நினைவிழப்பு) நோய் ஏற்பட்டது. நிலைமை தொடர்ந்து மோசமாகிச் சென்றதால், 1941 செப்டம்பர் 29ந்தேதி இவருக்கு நோயில் பூசுதல் அருளடையாளம் வழங்கப்பட்டது. மறுநாளே நினைவுத் திறனை மீண்டும் பெற்ற அல்போன்சா, உடல் நலத்திலும் சில ஆண்டுகள் படிப்படியாக முன்னேற்றம் அடைந்தார். ஆயினும் 1945 ஜூலையில், இவருக்கு வயிற்றில் ஏற்பட்ட சிலக் கோளாறுகளால் உணவு செரிக்காத நிலை ஏற்பட்டது. தொடர்ந்து பல நோய்களால் துன்புற்ற அல்போன்சா, 1946 ஜூலை 28ந்தேதி தமது 35ஆம் வயதில் இறையடி சேர்ந்தார். இவரது கல்லறையில் செபித்த பலரும் பெற்ற அற்புதங்களின் விளைவாக இவர்

புனிதராக கொண்டாடப்படுகிறார். நோய்கள் மற்றும் துன்பங்களின் நடுவிலும், கடவுளுக்கு உகந்த தூயதொரு வாழ்வு வாழலாம் என்பதற்கு புனித அல்போன்சா ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறார். இந்த புனிதையின் வாழ்வு தொடக்கம் முதலே துன்பத்தாலும் கண்ணீராலும் நிறைந்து காணப்பட்டது. இருந்தாலும், ஆண்டவர் இயேசுமீது தாம் கொண்டிருந்த நம்பிக்கையால் அவற்றைப் பொறுமையுடன் சகிக்க இவர் கற்றுக் கொண்டார். குழந்தை இயேசுவின் புனித தெரேசாமீது கொண்டிருந்த பக்தி, துன்பங்களைக் கையாள்வதற்கு ஒரு வழிகாட்டுதலைப் பெற்றார். கிறிஸ்தவர்களின் நம்பிக்கை வாழ்வில், புனிதர்களின் எடுத்துக்காட்டு வகிக்கும் பங்கு என்னவென்று இவரது வாழ்வில் இருந்து நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

"அனைத்து சூழ்நிலைகளிலும் நாங்கள் கடவுளின் பணியாளர்கள் என்பதை எங்கள் நடத்தையால் காட்டுகிறோம். வேதனை, இடர், நெருக்கடி ஆகியவற்றை மனவுறுதியோடு தாங்கி வருகிறோம்" (1கொரி. 6:4) என்னும் திருத்தூதர் பவுலின் வார்த்தைகள் புனித அல்போன்சாவின் வாழ்விலும் எதிரொலித்தன என்பது உறுதி. நமது வாழ்வில் எத்தகைய துன்பங்கள், நோய்கள் மற்றும் நெருக்கடிகள் வந்தாலும் அவற்றைப் பொறுமையுடன் சகிக்க கற்றுக் கொண்டால், நாமும் புனிதத்தில் வளர்ந்து கடவுளுக்கு மாட்சி அளிக்கலாம்.

## திருஅவைச் செய்திகள்

சகோ. சூசைராஜ், ச.ச.

### இந்திய இரயில் விபத்து குறித்த திருத்தந்தையின் கவலை

ஜூன் மாதம் 2ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை இந்தியாவில் ஏறக்குறைய 300 பேரின் உயிர்களைப் பலிவாங்கிய இரயில் விபத்து குறித்து தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ். உரோம் நகர் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் குழுமியிருந்த திருப்பயணிகளுக்கு நண்பகல் மூவேளை செபஉரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த இரயில் பயணத்தில் உயிரிழந்தவர்களுக்காக செபிப்பதாகவும், காயமடைந்த அனைவரின் அருகாமையில் தான் இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் இவ்வுலகில் போருக்குப் பலியாகிவரும் மக்களை, குறிப்பாக உக்ரைனில் துயருறும் மக்களை நினைவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவர்களுக்காகச் செபிப்பதாகவும், தெரிவித்தார். போரால் பெருந்துன்பங்களை அனுபவித்துவரும் மக்கள் அனைவரையும் அன்னைமரியின் பாதுகாப்பில் ஒப்படைப்பதாகவும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### திருத்தந்தையின் அறுவை சிகிச்சை நல்லபடியாக முடிந்தது

குடலிறக்க அறுவை சிகிச்சைக்காக உரோம் ஜெமெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 86 வயதான திருத்தந்தை

பிரான்சிஸ் அவர்களின் குடலிறக்க அறுவை சிகிச்சையானது எந்த விதமான இடையூறுமின்றி மூன்று மணி நேர அறுவைச் சிகிச்சை நல்ல விதமாக முடிந்து நலமாக இருப்பதாக தெரிவித்தார். திருத்தந்தையின் உடல்நிலை காரணமாக ஜூன் 18ம் தேதிவரை திருத்தந்தையின் பொது நிகழ்வுகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மத்தேயு புரூனி அவர்கள், தொடர்ந்து திருத்தந்தையின் உடல் நலனிற்காக செபிக்கவும் கேட்டுக்கொண்டார்.

**கடவுளின் அன்பு வலிமையானது - கர்தினால் பரோலின்**

ஜூன் 7, உரோமில் உள்ள புனித ஆலயத்தில் குழந்தை இயேசுவின் புனித தெரசா நினைவுச் சின்னங்கள் மற்றும் அவரது பெற்றோர்களான அருளாளர்கள் லூயிஸ் மற்றும் ஜெலி ஆகியோரின் நினைவுச் சின்னங்கள் முன்னிலையில் நடைபெற்ற திருப்பலியில் பங்கேற்றபோது இவ்வாறு கூறினார் கர்தினால் பரோலின். இயேசுவை ஆழமாக அன்பு செய்து அவரை வாழ்வின் ஒரே துணையாக ஆக்குவதன் வழியாக, அவருடைய வாழ்நாள் எண்ணங்கள், செயல்கள், கவனம் அனைத்தையும் இயேசுவுக்காக அர்ப்பணித்தவர் புனித குழந்தை இயேசுவின் தெரசா என்றும், எல்லாவற்றையும் தியாகம் செய்த அவர், விண்ணுலகில் வானத்தூ தரைப் போலவும் இயேசுவின் மணவாட்டி போலவும் திகழ்கின்றார் என்றும் கூறினார்.

என் பணி அன்பு செய்வதே என்பதை தனது வாழ்வில் வெளிப்படுத்திய குழந்தை இயேசுவின் தெரசா, குடும்பம் முதல் கார்மேல் இல்லம் வரை எல்லா இடங்களிலும் இயேசுவை ஆழமாக அன்பு செய்தார் என்றும், தனது வாழ்க்கையின் அனைத்து நிகழ்வுகளிலும், மிகவும் வேதனையான நிகழ்வுகளிலும் அவருடைய அன்பான உடனிருப்பை உணர்ந்து ஏற்றவர் என்றும் கூறினார் கர்தினால் பரோலின். கடவுள் மற்றும் மனிதனைப் பற்றிய உண்மையை ஏற்றல், நம்பிக்கையைப் பாதுகாத்தல், தவறான எண்ணங்களை மாற்றிக் கொள்ளுதல், உயிர்த்தெழுந்த இயேசுவில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் அணுகக் கூடிய கடவுளின் ஆற்றலைப் புரிந்துக்கொள்ளுதல், கடவுளின் வாக்குறுதியை நம்புதல் போன்றவற்றிற்காக இயேசு நம்மை அழைக்கிறார் என்றும் எடுத்துரைத்தார் கர்தினால் பரோலின். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் அனுபவத்திலிருந்துதான் இறந்தவர்களின் உயிர்த்தெழுதல் நம்பிக்கை பலப்படுத்தப்பட்டுள்ளது என்று வலியுறுத்திய கர்தினால் பரோலின் அவர்கள், எழுதல், உயிர்த்தெழுதல் என்பது கிறிஸ்துவுடன் என்றென்றும் வாழ்வதாகும் என்று எடுத்துரைத்தார்.

**இரயில் விபத்தின்போது மீட்புப் பணிகளை துவக்கிய மறைமாவட்டம்**

ஒரிசாவில் நடந்த இரயில் விபத்தின்போது உடனடியாக தன் மீட்புப் பணிகளையும் மருத்துவப் பணிகளையும் துவக்கியதாக அறிவிக்கிறது

பாலசோர் மறைமாவட்டம். மூன்று இரயில்கள் மோதிக்கொண்ட இந்த விபத்தில் பலபேர் உயிரிழந்துள்ளதாக இந்திய இரயில் துறையின் அதிகாரப்பூர்வத் தகவல் தெரிவிக்கின்ற அதேவேளை, விபத்து நடந்த ஒருசில மணி நேரத்திலேயே நடு இரவிலும், விபத்துப் பகுதிக்கு உதவிப்பொருட்களுடன் மீட்புப் பணியாளர்களை அனுப்பியது பாலசோர் மறைமாவட்டம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் வசதிகளை வழங்கியதுடன் அவர்கள் தங்கள் உறவினர்களைத் தொடர்பு கொள்ளவும் உதவியுள்ளது பாலசோர் மறைமாவட்டம். இந்த இரயில் விபத்துக் குறித்து தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் செய்திகளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், மும்பை கர்தினால் ஆஸ்வால்டு கிரேசியஸ் அவர்களும் ஏனைய தலத்திருஅவைத் தலைவர்களும் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

**அநீதிக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து குரல் எழுப்ப**

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரின் பாலியல் தொல்லைக்கு எதிராக நியாயம் கேட்டுப் போராடிவரும் மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதரவாகக் கத்தோலிக்க பெண் துறவிகள் போராட்டம் ஒன்றை நடத்தினர். ஜூன் மாதம் 5ம் தேதியன்று கர்நாடகாவின் பெங்களூருவில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் ஏறக்குறைய 300 பெண் துறவறத்தாருடன் ஏறக்குறைய 200 அருள்பணியாளர்கள், அருள்சகோதரர்கள் மற்றும் பொதுநிலையினரும் தங்கள் ஒருமைப்பாட்டை வெளியிட்டுக் கலந்துக்கொண்டனர். அரசியலில் சக்தி வாய்ந்த ஆளும் கட்சியைச் சேர்ந்த மல்யுத்த கூட்டமைப்பின் தலைவருக்கு எதிராக நியாயம் கேட்டுப் போராடிவரும் மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதரவாக இந்திய பெண் கத்தோலிக்க பெண் துறவறத்தார் தங்கள் ஒருமைப்பாட்டை வெளியிடுவதாக இந்திய கத்தோலிக்க துறவறத்தார் அமைப்பின் தலைவர் அருள்சகோதரி Nirmalini Nazareth தெரிவித்தார்.

பாரத ஜனதா கட்சியின் சட்டமன்ற அங்கத்தினரும் இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவருமான Brij Bhushan Sharan Singh மீது மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் குற்றச்சாட்டுகளை வைத்து கடந்த 5 மாதங்களாக தெருவில் இறங்கி போராடி வருகின்றபோதிலும், அவர்களுக்குச் செவிமடுக்க அரசு மறுத்தே வருகின்றது. பல ஒலிம்பிக் மற்றும் அனைத்துலகப் போட்டிகளில் கலந்துக்கொண்டு பதக்கங்களைப் பெற்ற மல்யுத்த வீராங்கனைகள் தாங்கள் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டதாக காவல் நிலையத்தில் வழக்குப் பதிவுச் செய்துள்ள போதிலும், மே மாதம் 28ம்தேதி இந்த வீராங்கனைகள்மீது காவல்துறை தாக்குதலை நடத்தி இவர்களைக் கலைக்க முயன்றது.

## சுடர் வாசகர் போட்டி 99 சரியான விடைகள்

1. 16வது மாமன்றம், அக்டோபர் 4 முதல் 29 வரை
2. 70 பேர்
3. லூக்கா 11: 27
4. திருமுழுக்கு யோவான்
5. புனித ரோமுவால்டு
6. 336 வருடங்கள்
7. டிரான்சித் தூருஸ்
8. புனித சார்லஸ் லவாங்கோ
9. கர்தினால் மரியோ கிரேக்
10. தூய இதயம் இயேசுவின் இதயம், மாசற்ற இதயம் மரியாளின் இதயம்
11. புனித பவுல்
12. புனித ஜோசப் கப்பாசோ
13. மரியாளின் மாசற்ற இதயம்
14. பெர்டினான்டு மார்டின் தே பர்னாத்து
15. புனித ஸ்டீபன் சந்தூர்

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

A. Martine, Trichy

R. Flora Mary Josephine, Tirupur

C. Pauline Soosainathan, Chengalpet

## சுடர் வாசகர் போட்டி - 100

1. "என் பணி அன்பு செய்வதே" கூறியது யார்?
2. புனித லொயோலா இஞ்ஞாசியாருக்கு படிக்கக் கொடுத்த புத்தகங்கள் யாவை?
3. எபிரேய மொழியில் "சுவக்கின்" என்பதற்கு பொருள் என்ன?
4. திருப்பயணிகளின் பாதுகாவலர் யார்?
5. அமெரிக்காவின் முதல் அருளாளர் யார்?
6. புனித மரிய கொரற்றி இறக்கும்போது கூறிய வார்த்தைகள் என்ன?
7. "நாமும் செல்வோம் அவரோடு இறப்போம்" கூறியது யார்?
8. "சகாய அன்னையின் கோட்டை" என்றால் என்ன?
9. 2008, அக்டோபர் 12 அன்று புனிதர் பட்டம் யாரால், யாருக்கு கொடுக்கப்பட்டது?
10. யாக்கோபு யாரால் எப்படி கொல்லப்பட்டார்?
11. "அமைதி என்னும் விதையிலிருந்து நீதி என்னும் விதை விளைகிறது" விவிலியத்தில் எங்குள்ளது?
12. கான்ஸ்டான்டைன் நோபிலில் உள்ள ஆலயத்தில் யாருடைய எலும்பு உள்ளது?
13. புனித மரிய கொரற்றிக்கு புனிதர் பட்டம் வழங்கியவர் யார்?
14. அருளாளர் மரிய ரொமேரோ மேனஸஸ் எந்த நாள் இறந்தார்?
15. சென்னையில் தோமையார் பதுங்கியிருந்த இடம் எது?


### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
.........................................
.........................................
.........................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி
புனித ஜான் மரிய வியான்னி
புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு
பொதுக்காலத்தின் 18ஆம் ஞாயிறு (தோற்ற மாற்றம்)
பொதுக்காலத்தின் 19ஆம் ஞாயிறு
மரியாவின் விண்ணேற்பு - சுதந்திர தின விழா
புனித ஜான் யூட்ஸ்
பொதுக்காலத்தின் 20ஆம் ஞாயிறு
அரசியான புனித கன்னி மரியா
புனித பர்த்தலமேயு திருத்தூதர்
அருளாளர் மரிய ட்ரொங்க்காத்தி
அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா
பொதுக்காலத்தின் 21ஆம் ஞாயிறு
புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள்

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

விண்ணேற்பு அன்னை விடுதலையின் அன்னை
புனித பர்த்தலமேயு திருத்தூதர் வாழ்வை அறிவோம்
அரு. ட்ரொங்க்காத்தி மற்றும் அரு. நமுங்க்குரா - வாழ்வு தரும் பாடம்
திருஅவையின் செய்திகள்

அன்பு நிறை வாசகர்களே!

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூலை 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# ஜூலை மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ச | | தொ.நூ. 18: 1-15 | மத். 8: 5-17 |
| 2 | **ஞா** | **பொதுக்காலம் 13ம் ஞாயிறு** | **I.** 2அர. 4 :8-11.14-16<br>**II.** உரோ. 6: 3-4.8-11 | மத். 10: 37-42 |
| 3 | தி | **புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா** | **I.** திப. 10: 24-35<br>**II.** எபே. 2: 19-22 | யோவா 20: 24-29 |
| 4 | செ | போர்த்துக்கல் நாட்டு புனித எலிசபெத் | தொ.நூ. 19: 15-29 | மத். 8: 23-27 |
| 5 | பு | புனித அந்தோணி மரிய சக்கரியா | தொ.நூ. 21: 5,8-20 | மத். 8: 28-34 |
| 6 | வி | புனித மரிய கொரற்றி | தொ.நூ. 22: 1-19 | மத். 9: 1-8 |
| 7 | வெ | | தொ.நூ. 23: 1-4,19,24:1-8, 62-67 | மத். 9: 9-13 |
| 8 | ச | | தொ.நூ. 27: 1-5,15-29 | மத். 9: 14-17 |
| 9 | **ஞா** | **பொதுக்காலம் 14ம் ஞாயிறு** | **I.** சக. 9: 9-10<br>**II.** உரோ. 8: 9.11-13 | மத். 11: 25-30 |
| 10 | தி | | தொ.நூ. 28: 10-22 | மத். 9: 18-26 |
| 11 | செ | புனித பெனடிக்ட் | தொ.நூ. 32: 22-32 | மத். 9: 32-38 |
| 12 | பு | | தொ.நூ. 41:55-57,42: 5-7,17-24 | மத். 10: 1-7 |
| 13 | வி | புனித ஹென்றி | தொ.நூ. 44:18-21.23-29, 45: 1-5 | மத். 10: 7-15 |
| 14 | வெ | புனித கமில்லஸ் தெ லெல்லிஸ் | தொ.நூ. 46:1-7,28-30 | மத். 10: 16-23 |
| 15 | ச | புனித பொனவெந்தூர் | தொ.நூ. 49:29-32,50:15-26 | மத். 10: 24-33 |
| 16 | **ஞா** | **பொதுக்காலம் 15ம் ஞாயிறு** | **I.** எசா. 55: 10-11<br>**II.** உரோ. 8: 18-23 | மத். 13: 1- 23 |
| 17 | தி | | வி.ப. 1:8-14.22 | மத். 10: 34-11:1 |
| 18 | செ | | வி.ப. 2: 1-15 | மத். 11: 20-24 |
| 19 | பு | | வி.ப. 3: 1-6,9-12 | மத். 11: 25-27 |
| 20 | வி | புனித அப்போலினாரிஸ் | வி.ப. 3: 13-20 | மத். 11: 28-30 |
| 21 | வெ | பிரிந்திசி நகர் புனித லாரன்ஸ் | வி.ப. 11: 10-12:14 | மத். 12: 1-8 |
| 22 | ச | புனித மகதலா மரியா விழா | இ.பா. 3:1-4 | யோவா.20: 1,11-18 |
| 23 | **ஞா** | **பொதுக்காலத்தின் 12ம் ஞாயிறு** | **I.** தொ.நூ. 20: 13<br>**II.** உரோ. 5: 12-15 | மத். 10: 26-33 |
| 24 | தி | புனித ஷார்பல் மாக்லுப் | வி.ப. 14: 5-18 | மத். 12: 38-42 |
| 25 | செ | புனித யாக்கோபு திருத்தூதர் விழா | 2கொரி. 4: 7-15 | மத். 20: 20-28 |
| 26 | பு | புனிதர்கள் சுவக்கின், அன்னா | வி.ப.16:1-5,9-15 | மத். 13: 1-9 |
| 27 | வி | | வி.ப. 19:1-2,9-11,16-20 | மத். 13:10-17 |
| 28 | வெ | புனித அல்போன்சா முட்டாத்துப்படத்து | வி.ப. 20: 1-17 | மத். 13: 18-23 |
| 29 | ச | புனிதர்கள் மார்த்தா, மரியா லாசர் | வி.ப. 24: 3-8 | மத். 12: 24-30 |
| 30 | **ஞா** | **பொதுக்காலம் 13ம் ஞாயிறு** | **I.** 1அர.3: 5,7-12<br>**II.** உரோ. 8: 28-30 | மத். 13: 44-52 |
| 31 | தி | லெயோலா நகர் புனித இஞ்ஞாசியார் | வி.ப. 32:15-24,30-34 | மத். 13: 31-35 |